www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.3 திருவள்ளுவர் ஆண்டு 2051
14.07.2019 - 13.08.2019
ISSN : 2195-6480




## ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு நாம் என்ன செய்வது?

சிங்களம் ஒரு புறம், முஸ்லிம்கள் மறு புறம்!

## ஈழத் தமிழர் தமது தாயகத்தை இழப்பதா?

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

TKS BEST FOODS

DORTMUND மாநகரில்

மளிகை உலகின்

BIGG BOSS

5th ANNIVERSARY

# ஒரு நாள் மட்டும்!

## விழாக்காலப் பிரமாண்ட விற்பனை....

# 05.10.2019

நீங்கள் நம்பமுடியாத மாபெரும் விலைச்சலுகைகள் மற்றும்
குலுக்கல் முறையிலான (நம்பமுடியாத) பரிசுப் பொருட்களும்......!

# BIG SALE ONE DAY

100€ க்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கான
குலுக்கல் முறையிலான பரிசில்கள்



இலங்கை/இந்தியா விமானச்சீட்டு

300€ கொள்வனவுப் பற்றுச்சீட்டு

200€ கொள்வனவுப் பற்றுச்சீட்டு

0049 231 950 468 83
0049 231 950 468 82

tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de

tksbestfoods

Rheinische Str. 79, 44137, Dortmund Germany

# DER VERBESSERTE SUPER-TARIF




ortel MOBILE

**NEU: Deutschland Flat**

- 250 Minuten aus Deutschland in 50 weitere Länder
- Internet Flat ~~4GB~~ 5GB
- Surfen & Telefonieren in der EU
- Deutschland Flat

ஒரே சிம்மில் இருந்து...
யேர்மனிக்கு முற்றிலும்
**இலவசம்**

ஐரோப்பா, இந்தியா மேலும் பல
நாடுகளுக்கு 250 நிமிடங்கள்
**4GB Internet**




ஐரோப்பிய நாடுகளில் இருந்து
பயன்படுத்தலாம். 4GB முடிந்தால் மீண்டும்
9 யூரோக்களுக்கு பெற முடியும்

**19 99 €** [15) ] /4 Wochen

### Smart World L

Surfen und günstig ins Ausland telefonieren

- ✓ 250 Minuten aus Deutschland in 50 Länder
- ✓ Internet Flat bis 4 GB
- ✓ Surfen und günstig Telefonieren in der EU
- ✓ Deutschland Flat

19 99 € /4 Wochen (*)

Zur Smart World L

### Allnet Flat L

Günstig telefonieren und surfen

- ✓ Deutschland Flat
- ✓ Internet Flat 7 GB
- ✓ Surfen und günstig telefonieren im EU-Ausland

24 99 € /4 Wochen (*)

Zur Allnet Flat L

### Internet Flat L

Entspannt surfen

- ✓ Internet Flat 5,5 GB
- ✓ Surfen in der EU
- ✓ Günstig surfen in Deutschland und der EU

19 99 € /4 Wochen (*)

Zur Internet Flat L





**Nur Festnetz



AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine

14.ஆடி 2019 13 - ஆவணி 2019
சுவடி / ISSUE 8.3

**தலைமை ஆசிரியர்**
திரு. த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்**
திரு. வன்னித்தம்பி

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany

Tel: 00 49 176 47 11 87 11

Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**அன்பு நிறைந்த வணக்கம்.**

# ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு நாம் என்ன செய்வது?

இப்படி உங்களையும், எங்களையும் பார்த்துக் கேட்கிறார் ரூபவ். தமிழ் மக்களின் தனிப் பெரும் தலைவர், புலிகள் அமைப்பின் தலைவரால் அத்தகைய பெருமை பெற்றவர். ஆனால் அந்த உண்மையைப் பல தடவைகள் மறுதலித்தவர். இந்திய அமெரிக்க அரசுகளின் தத்துப் பிள்ளையாக தம்மை வளர்த்துக் கொண்டவர் திருவாளர் இராஜவரோதயன் சம்பந்தன்.

இன்று அவருக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட, அவரை இந்தப் பாரிய பொறுப்பில் வைத்த தமிழ் மக்கள்தான் காரணம் என்பது தெரிகிறது. ஆனாலும், இந்த வியாபாரத்தில் பல நல்ல பேரங்களை ரணிலை மிரட்டிப் பெற்றுக் கொண்டதாக ஒரு தமிழ்ச் செய்தி நிருபர் நீண்ட





கதை விட்டிருக்கிறார். அதைத்தான் சிங்கள ஊடகமும், சிங்கள மக்களுக்கு கூறி கடுப்பு ஏத்தி விட்டுள்ளன.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் அநுர குமார திசநாயக்க விடுத்த ஊடக அறிக்கையில் மத்திய வங்கி ஊழல் பணம் கடைசி நேரத்தில் கூட்டமைப்பை விலைக்கு வாங்க உதவியது எனக் கூறி உள்ளார். எத்தனை கோடிகள் கை மாறினதோ! அந்த கடவுள்தான் அறிவான். அவரது சொந்தத் தொகுதியில் கிண்ணியா கிணறுகளுடன் தொடர்பு பட்ட பழைய பிள்ளையார் கோயிலைத் தொல் பொருட் திணைக்களம் இடித்துப் புத்த விகாரையைக் கட்டுகிறது. அந்தப் பாவம் கூடவா சும்மா விட்டுவிடும் என நம்புகிறார் சம்பந்தன்?

அவரை விட மேலும் ஒரு படி மேலே போய் ரணில்தான் சிறந்த தலைவர் என விஜயகலா மகேசுவரன் அவரை வெல்ல வைப்போம் என லாலி பாடுகிறார்.

தமிழன் அரசியல் வரலாற்றிலே துரோகிகளின் சந்ததிகள் பெருகி வரும் நிலை மாறினால் மட்டுமே தமிழினம் உயிர் தப்ப முடியும் என்கிற நிலையே நீடிக்கிறது.

இதை இனி யாரால் மாற்ற முடியும்? அன்புடன்.....

**ஆசிரியர், அகரம் குழுமம்**








# அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கத்தின் காலத்தில் இன்று இராஜவரோதயன் சம்பந்தனின் காலம் இல்லை!

**விபீடணன் காலம் முதல், காக்கை வன்னியன், அமிர்தலிங்கம், கருணா, சம்பந்தன், சுமந்திரன் என நீண்டு செல்லும் துரோகிகள் பட்டியல் என்றுதான் முடிவைக் காணுமோ? இந்த வியாபாரத்தில் எத்தனை கோடிகள் கைமாறின என்கிற உண்மைகளை காலம்தான் சொல்ல வேண்டும்.**

அதனால்தான் சம்பந்தன் தமிழ் மக்களையே இன்று கேட்கிறார், 'ரணிலைக் கவிழ்த்து விட்டு நாம் என்ன செய்வது?' என்று. இதே கேள்வியை அவர் கேட்க வேண்டிய இடம் புது டில்லி, அல்லுத அமரிக்காவின் வெள்ளை மாளிகையில்.

இத்தனை வருடங்களாக மக்களை ஏமாற்றி ஏய்த்து விட்டு, உருவாக்கிய புலிகளையும், உயிர் கொடுத்த தமிழ் மக்களையும் இனப் படு கொலைக் களத்தில் பலிகொடுத்து விட்டு, இப்படி ஒரு கேனைத்தனமான கேள்வியைத் தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்க எத்தனை திமிர் இவருக்கு இருக்க வேண்டும்?

அவருக்கு இந்தக் கேள்வியைக் கேட்க எல்லாத் தகுதிகளும் உண்டு. காரணம் அவரைப் படைத்த பிரம்மாக்களைப் பரலோகம் அனுப்ப உதவிய இந்தியாவும், அமெரிக்காவும் இன்று அவரைப் பாதுகாக்கத் தயாராக இருக்கின்றன.

அவற்றுக்கும் மேலாக அவருடைய

திரிகோணமலை இல்லத்துக்கு தமிழ் மக்களிடம் இருந்து பாதுகாப்பு வழங்கி, ரணில் மைத்திரி மகிந்த அரசு இலங்கைக் காவல் படையை வைத்துக் காவல் காக்கிறது. அவரது கொழும்பு இல்லத்தைப் பற்றிச் சொல்லவே தேவை இல்லை. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே அவருக்கு கொழும்பில் முழுமையான பாது காப்பை, குண்டு துளைக்க முடியாத காருடன் பெற்றிருந்தார். அவசியமானால் அமெரிக்கப் படையும் அவரது வீட்டைக் காக்கும் பொறுப்பை ஏற்றுவிடும்.



இத்தனை சாமர்த்தியம் படைத்த காக்கை வன்னியனை தமிழ் இனம் ஏனோ கவனிக்கத் தவறிவிட்டார்கள் போலும். இல்லாவிட்டால் இந்த கடுவன் பூனைக் கூட்டத்திடமா தமிழ் மக்கள் என்ற பாலைப் பாதுகாக்கும் பொறுப்பை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் விட்டிருப்பார்?

**த. எதிர்மன்னசிங்கம்**

அவர் இன்று பரமசிவன் கழுத்தைச் சுற்றிப் படம் எடுத்து ஆடும் நச்சுப் பாம்பு. தங்களுடைய வீடுகளையும், உறவுகளையும், பிழைக்கும் வழிகளையும் அவரை நம்பித் தொலைத்து விட்டு, வெறுங் கையோடு வீதிகளில் தவிக்கும் அப்பாவிக் கிழக்கு மாகாண மக்களால் என்னதான் செய்துவிட முடியும்? என்கிற மமதை அவருக்கு. அதனால் “பனையால் விழுந்தவனை மாடேறி விழக்குவது” போல வாக்களித்து பதவி கொடுத்த மக்களைப் ‘பல்லுக்குப் பதம்’ பார்க்கிற வேலையாக இப்படிக் கேள்வி கேட்கிறார்.

அவருக்கு இப்போ வெள்ளி திசை, குரு சந்திர யோகம். ஆனால், வாக்களித்த தமிழ் மக்களுக்கோ ஏழரைச்சனி, மங்கு சனி, மரணச் சனி என எல்லாச் சனியன்களின் ஆட்சி. அதனால்தான் தவிச்ச வாய்க்குத் தண்ணியோ, கருமாதிக் கடன்களோ எள்ளும், தண்ணியும் இறைப்பார் இல்லாமல் அவதிப்படும் நிலை வந்துள்ளது.

இவற்றை எல்லாம் பார்க்கும் பொழுது அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கம் அப்படி என்ன தவறைச் செய்தார்? என்ற கேள்வியை இன்னும் சிலர் கேட்கிறார்கள்.




GGS
FOOD SERVICE

CONTACT
R.P. PARAMESH

02305 93 73 75
017 93 91 607

1977 தேர்தலில் அவரும் இவருடனும் சேர்ந்துதான் தமிழீழம் அமைப்போம் என்றார். அவரும் கொழும்பு தமக்குப் பாதுகாப்பானது என நம்பிக் கிடைத்த பொலிஸ் பாதுகாப் போடுதான் இருந்தார். ஆனால் எப்படியோ அந்த எருமையில போறவன்ர கண்ணில இருந்து தப்ப முடியாமல் போய்விட்டது. இப்ப ரணிலையும் கவிழ்த்துப் போட்டு, என்ன செய்யிறது? என்று பச்சைப் புள்ளைத் தனமாய் கேட்கிறார்.

இதைப் போய் அவரது நயவஞ்சக அரசியல் காட்டிக் கொடுப்புகளால் அவரல் அடிபட்டு சாகக் கிடக்கிற தமிழ் நாய்களிடம் கேக்கிறதைவிட, புது டில்லியிலும், நியூ யோர்க்கிலும் உள்ள ராசாக்களிடம் கேக்கிற புத்தி கூட இல்லை என்றால் ஐயா, எங்கை என்ன படிப்பு படிச்சார்?. சோதினை எழுதியா, குதிரை ஓட்டியா பாசு பண்ணினார்?

அவருக்குப் போதாத காலம் இன்று நீ ரணிலுக்குக் காவடி தூக்கிற மாதிரித்தான் அன்று ஜே.ஆர். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற அமிர்தலிங்கத்தை, தமிழரின் ஆதரவைக் கேட்டு பேச அழைத்தார். அந்தப் பேச்சில் பேராசிரியர் ஏ.ஜே. வில்சனும் போயிருந்தார்.

1981ம் ஆண்டுத் தேர்தலில் தோற்ற பின்னரும், கூலிக்கு மாரடிக்கிற கூட்டணி தேசியப் பட்டியலில் தெரிவு செய்து, மக்களின் தீர்ப்பையே மாற்றி எழுதி, மக்களுக்குத் துரோகம் செய்தது. இன்றும் அதே கூட்டுக் கொலையாளிகள்தான் தமிழ் மக்களுக்கான போர்க் குற்ற விசாரணையோ, நீதியோ கிடைக்காமல் செய்து வருவதை அறியாத மூட ஜனமங்களாக உலகின் முன்பு கூட்டமைப்பு காண்பித்து வருகிறது.



ஆனால், 8ஆண்டுகள் கழிந்த பின்னர் புன்னகை மன்னன் அமிர்தலிங்கம்




# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

Double Horse

Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · PATAK'S Original · Laila

மீண்டும் ஜே.ஆரின் வலையில் விழுந்தார். ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஒரு வேட்பாளரை நிறுத்துமிடத்து, அது ஜெயவர்தனாவின் வெற்றி வாய்பை குழி தோண்டிப் புதைத்துவிடும் என்பதை ஜே.ஆரும் அவரோடு பேச வந்த பிரேமதாசாவுக்கும் நன்றாகத் தெரிந்திருந்தது. எனவே, தமிழர் தரப்பில் யாரும் போட்டியிடக் கூடாது என்பதும், அதற்கு அமிர்தலிங்கத்தின் ஆதரவு கேட்கத்தான் அந்தச் சந்திப்பு.

அந்தத் தேர்தலில் தமிழர் தரப்பில் கூட்டமைப்பு போட்டியிட வேண்டும் எனச் சிலரது கோரிக்கையும் நிலவிய சூழலில் இச்சந்திப்பு இடம் பெற்றது. அந்தத் தேர்தலில் குமார் பொன்னம்பலம் போட்டியிட்டதும், தமிழர் என்ற வகையில் கூட்டணி தனது ஆதரவை அவருக்கே வழங்க வேண்டிய தார்மீகக் கடமையும் இருந்தது. அப்படி இருந்தும் கூட அமிர்தலிங்கம் ஜே.ஆரின் கோரிக்கைக்கு எந்தவித நிபந்தனையும் இல்லாமலே இணங்கினார்.

தமிழ் மக்களின், குறிப்பாகத் தமிழ் போராளிகள் தொடர்பான எத்தனையோ தேவைகளை நிபந்தனையாக வைத்திருக்க முடியும். ஆனால் தமது கட்சி ஆதரவளிக்கும் எனச் சொல்லாமலே நடுநிலை வகிக்கும் என்றார். அதுவே தமக்குப் போதும் என ஜே.ஆர். தேர்தலில் வெற்றி பெற்றுதன் மூலம் ஒருமுறை ஜனாதிபதியாகி, தமிழின அழிப்பைச் செய்தார்.

ஒரு வேளை குமார் பொன்னம்பலத்தை ஆதரித்து, அதனால் ஜே.ஆர்.மீண்டும் ஜனாதிபதி ஆகும் நிலை தவிர்க்கப்பட்டிருந்தால் தமிழ் மக்களின் நிலை இப்படியா போயிருக்கும்?

விபீடணன் காலம் முதல் காக்கை வன்னியன், அமிர்தலிங்கம், கருணா, சம்பந்தன், சுமந்திரன் என நீண்டு செல்லும் துரோகிகள் பட்டியல் என்றுதான் முடிவைக் காணுமோ? இந்த வியாபாரத்தில் எத்தனை கோடிகள் கைமாறின என்கிற உண்மைகளை காலம்தான் சொல்ல வேண்டும்





புதுப்பொலிவுடன் மீண்டும்....
ESTD 1992
மங்கையரின் மனங் கவரும்
2019 வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Gopara Gnanam
Rheinische Str.62
44147 Dortmund
Mob.: 0171 330 65 42,
0176 246 54 009
Wedding Sarees
DISCOUNT!!

A K M
M

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

தமிழனின் வரலாற்றில்
மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது






உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



A K M
M

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்
சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

“விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM

தேவன்

# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி




# பைத்தியங்கள்..

*Bigboss* எனப்படும் அதீத மெருகூட்டல் நிகழ்வுதான் சமீபகாலமாக மக்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. அப்படி என்ன அங்கே இருக்கிறது? என்று கேட்டால், ‘ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது’ என்ற வாசகத்தைத் தவிர ஒன்றுமே இல்லை என்பதுதான் இந்த நிகழ்வின் விசேடமாம் (?!!).

போட்டியாளர்களைக் கண்ணைக் கட்டிக் காட்டிலா விட்டார்கள், கிடைத்ததை சாப்பிட்டுக்கொண்டு உயிர் பிழைத்து வாழுங்கள் என்று? சோறு, தண்ணீர் இல்லாமல் சிறையில் அடைத்தார்களா? அப்படியெல்லாம் இருந்தால் கூட, அடுத்த கணம் என்ன செய்வது? என்று யோசித்தவாறே பொழுதுகள் கழிந்துவிடும். வெளியுலகத் தொடர்பைத் துண்டித்து ஒரு வீட்டில், அதுவும் கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதுதான் அவர்களை இந்தப் பாடு படுத்துகிறது. அது பற்றி சுஜிதா சென் என்கிற பத்திரிகை எழுத்தாளரின் கட்டுரை இங்கே மொழிபெயர்க்கப்படுகிறது.

“அங்கேயுள்ள நிலவரம் எப்படி இருக்கும்? உள்ளே சென்றால் என்னவெல்லாம் நடக்கும்? என்று சல்மான்கான் தொகுத்த அலைவரிசைக் காட்சிகளைப் பார்த்து தெரிந்து கொண்டவர்கள்தான் அனைவரும்.

அவர்களுக்கு சில பல உளவியல் மாற்றங்கள் நிகழலாம். ஊடகமென்பது மக்களுக்கு முக்கியமானதே வெளியுலகத் தொடர்பும், செல்லிடப் பேசியும் தான். அதுவே அங்கு இல்லை எனும்போது கண்டிப்பாக உளவியலுக்குக் கொஞ்சம் வேலை இருக்கும் என்பதே நிதர்சனம்.

இதற்குமுன் வேறு மொழிகளில் நடந்தபோது, போட்டியாளர்களின் அனுபவம் பேசியதைக் கொஞ்சம் அலசுவோம்.

நெதர்லாந்து நாட்டின் **Big brother** (இதன் பிரதியே **Big Boss**) நிகழ்ச்சியில் சாதாரண மனிதர்களை வைத்து இதை நடத்திய போது, அவர்களுக்கு ஏகப்பட்ட உளவியல் மாற்றங்கள் ஏற்பட்டதால் இரண்டு உளவியலாளர்களை நியமனம் செய்து, எப்போதும் போட்டியாளர்களை கண்காணித்துக் கொண்டே இருந்தனர். அவர்கள் **Oxford** பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பீட்டர் கல்லட் மற்றும் **Manchester** பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஜெஃப்ரி பீட்டி. இந்த இரண்டு உளவியலாளர்களின் வேலையே வாரத்திற்கு ஒருமுறை போட்டியாளர்களின் மனநல மாற்றங்களை மக்களுக்குக்கொண்டு போய் சேர்ப்பதுதான்.

இதைப் பற்றி ஒரு சமூகவியலாளர், “இந்த **BigBrother** நிகழ்ச்சி தனது போட்டியாளர்களை குறிவைத்துத் தாக்கி, ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் வண்ணம் இருக்கிறது. இதே நிலை தொடர்ந்தது என்றால், கண்டிப்பாக இந்நிகழ்ச்சி பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி, தடை செய்யும் நிலை கூட ஏற்படலாம்” என்று கூறியிருக்கிறார். இதற்காகவே 24 மணிநேரமும் அந்த நிகழ்விற்கான வீட்டில் உளவியல் நிபுணர்களின் குழு இருந்துகொண்டே இருந்தது.

இதுகுறித்து **Sterling** பல்கலைக்கழகத்தின் ஊடக ஆராய்ச்சியாளர் கலாநிதி டேவிட் மில்லர், “மனித இயல்புகளைக் கண்டறியும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியை ஒவ்வொரு இரவும் நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டு வருகிறோம். ஆனால், இது மனித இயல்புகளைக் கண்டறிவதற்கான சரியான வழியே அல்ல. 70,000 யூரோக்களை வெற்றியீட்ட வேண்டும் என்பதற்காகப் போட்டியாளர்கள் தீவிர மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்.

அதுதவிர, சமூக நெறிமுறைகளையும் இந்த நிகழ்ச்சி மீறுகிறது. வெளியேற்றப்பட்ட ஒவ்வொரு போட்டியாளர்களையும் மனோதத்துவ அளவில் திரையிடப்பட்டுப் பார்க்கும் போது, அவர்கள் தீவிர மன அழுத்தத்திற்கு

**“ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது என்ற வாசகத்தைத் தவிர ஒன்றுமே இல்லை என்பதுதான் இந்த நிகழ்வின் விசேடமாம்”**



GENERALI



**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
☎ 058 473 24 45   058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch   076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**

வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**

சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**

உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**

சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**

ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**

அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**

உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்


INNENSTADT WEST
ortel MOBILE
DORTMUND
மாநகரில்
தமிழர் தெருவிழா
2019
100க்கும் மேற்பட்ட கலைஞர்கள் சங்கமிக்கும்
மாபெரும் ஆடல் பாடல் கொண்டாட்டம்....
Strassenfest der Tamilen
07.09.2019
11.00 bis 19.00 Uhr
தமிழர் அரங்கம்
Verein für tamilische Künstler e.V
VMDO
Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V.
HOUSE OF RESOURCES
Tamilischer Kultur Do
TKD
தமிழர் கலையகம்
Bildung
Begegnung
Beratung
ஜேர்மன் தமிழ் வர்த்தகர் சங்கம் e.V
GTVS
comdu.it
Deutschland
ஊடகஅனுசரணை
வெற்றிமணி
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
அகரம்
IBC தமிழ்
GTV
itn
தமிழ் MTV
STS தமிழ் TV
tamil.de
ETR
Lankasri
0151 633 633 33 | 0157 735 178 49 | 0177 679 4261 | 0162 803 1647 | 0151 27 990 990

உள்ளாகியிருப்பது தெரிய வந்துள்ளது" என்று கூறியுள்ளார்.

நெதர்லாந்து வானொலியின் ***World wide*** வெளியிட்டுள்ள செய்தியில், அகோரஃபோபியா என்ற மனநோய்தான் அதிகளவில் போட்டியாளர்களைத் தாக்கியுள்ளது என்றும் தெரியவந்துள்ளது. இந்த நோய் ஒருவன் தான் வசிக்கும் சூழலைப் பாதுகாப்பற்றது என்றும், அங்கிருந்து செல்ல வழியேதும் இல்லை என்றும் நினைக்கும் போது ஏற்படும் ஒருவித பயம்தான்.

இரண்டாவது நோயாக நோமோஃபோபியா எனும் நவீன செல்லிடப் பேசிகளுக்கு அடிமையாதல் நிலையும் இவர்களை அதிகம் தாக்கியுள்ளது. எப்படி மதுப்பழக்கம் உள்ளவர்களுக்கு, மது அருந்தவில்லை என்றால் கை-காலெல்லாம் நடுங்குகிறதோ? அதேபோல் செல்லிடப் அருகில் இல்லையென்றால் உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிடும் இவர்களுக்கு.

ஒருவேளை இந்த மனநோய் ***BigBoss*** இல் உள்ளவர்களுக்கு இருந்ததென்றால், அவர்கள் எப்போது பார்த்தாலும் தங்கள் செல்லிடப்பேசியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். நிறைய தனித்துவமான இரகசியங்களைக் கைத்தொலைபேசியில் வைத்திருப்பவர்களுக்கு, அதை யாராவது எடுத்துப் பார்த்துவிடுவார்களோ என்ற பயமும் கூட ஏற்படலாம்.

***BigBrother*** நிகழ்ச்சியின் இறுதியில், வெற்றியாளர் 'பார்ட்' என்பவர்தான் தீவிர மனஅழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளார் என்பதையும், ***Channel-4*** தொலைக்காட்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இவருக்குத் தாக்கியிருக்கும் மனஅழுத்தம் சற்று வித்தியாசமானது. இவர் அந்த வீட்டிலேயே *108* நாட்கள் தங்கிப் பழக்கப்பட்டதனால், நிகழ்ச்சி முடிந்து வீட்டுக்குத் திரும்பிய பின்னரும், அவ்வீடு இருக்கும் தெருக்களிலேயே அங்கும் இங்குமாக இரவு முழுவதும் உலவிக்கொண்டிருப்பதை மக்கள் பார்த்து அதிர்ச்சியடைந்து, அவரை மனநல மருத்துவரிடம் சிகிச்சைக்கு சேர்த்தனர். பின்னர் அவர் எப்படி குணமாகினார் என்பது தனிக்கதை!

இதேபோல் தற்போது ***BigBoss***இல் இருக்கும் போட்டியாளர்களுக்கு என்னென்ன மாதிரியான மனநல



மாற்றங்கள் நிகழும்? என்பது பற்றி மனநல மருத்துவர் கவிதாபென் அவர்களிடம் பேசிய போது, "அனைத்து பிரபலங்களும் வெளியுலகிற்கு நன்கு அறிமுகமானவர்களே!. அவர்களே இங்கு புகழுக்காகத்தான் வந்திருக்கிறார்கள். அதனால் பெரியதாக சமூகமாற்றங்கள் எதுவும் நடப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. மேலும், ***Voyeurism*** எனப்படும் மற்றவர்கள் போடும் சண்டை, வாக்குவாதம், காதல் மற்றும் பாலியல் உணர்வுகளைப் பார்த்து திருப்தி கொள்ளும் மனநிலை பலருக்கு உண்டு.




இதனடிப்படையில்தான் இந்த நிகழ்ச்சியும் 360 பாகை கோணங்களில் ஒளிப்பதிவுக் கருவிகளை வைத்து அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர "போட்டி மனோநிலை" இந்த நிகழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இந்த அடிப்படையே சூழ்நிலை எப்படி வெற்றியையும், தோல்வியையும் தீர்மானிக்கிறது? என்பதைப் பற்றியதுதான். மேலும் வடஇந்திய ***Big Boss*** கண்டிப்பாக பார்த்த இவர்கள், அனைத்தையும் அறிந்துதான் இதில் கலந்து கொள்ள ஒப்புக் கொண்டுள்ளனர்.

தவிர, இந்த நிகழ்ச்சி முடிந்த பின்பு அவர்களை சோதனை செய்து பார்த்தால்தான் அவர்கள் மனநலம் பாதிக்கப் பட்டுள்ளார்களா? இல்லையா? என்பது புலப்படும். விமர்சனங்களை தாங்கக்கூடிய சக்தி இல்லாதவர்களுக்கும், உணர்ச்சி மிக்கவர்களுக்கும் நிகழ்ச்சி முடிந்து வெளி வந்தவுடன் கண்டிப்பாக சில மனநல பாதிப்புகள் இருக்கக்கூடும்" என்றும் அவர் தெரிவித்தார்.






NO. 14, PENSIONER STREET, TENNUR, TRICHY - 620 017.
Email: domesticlimra@gmail.com

**Our Products will quench your needs...**



# சாணி

மாட்டின் சாணி! இதன் அருமை தெரிந்தவர்கள் கிராமத்து மக்கள்தான்! நகரத்தில் கல் வீடுகளின் ஆதிக்கம் அதிகரித்ததால், மண் வீடுகள் இல்லாமலே போய்விட்டது. ஆனால், இன்றும் கிராமப் புறங்களில் கல்வீடு கட்டியிருப் போரும், ஒரு அறையையாவது மண்ணால் அமைத்து, அதை சாணியால் மெழுகி அழகாக வைத்திருப்பார்கள்.

கிரமத்து மண் வீடுகள் அனேகமாக ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும், சாணியால் மெழுகி அழகாக இருக்கும். மாட்டுச் சாணத்தில் மண்ணில் புத்தெடுக்கும் சிறு சிறு கிருமிகளைக் கொல்லக்கூடிய அரிய விஷச் சத்தும் இருப்பதால், வீடுகளைச் சுத்தியுள்ள காணிகளை கூட்டித் துப்பரவாக்கியவுடன், சாணியைக் கரைத்து தெளிப்பதையும் கிராமத்தில் அடிக்கடி காணமுடியும்!

இவை மட்டுமல்ல செடிகளில் வாட்டம் தெரிந்தால், வீட்டில் உள்ள வயதானவர்கள் சொல்வார்கள் “செடியில் வேர்ப் பகுதிகளைச் சுற்றி சாணியைப் போட்டு, தண்ணீர் ஊற்று” என்று. புதிதாக நட்டுவிட்ட றோசாக் கன்றுகளுக்கு தடியின் மேல்ப்பகுதி காய்ந்து விடாமல் இருக்க சாணியை உருட்டி அப்பிவைத்தால் அந்தத் தடியை காயவிடாது வைத்துக் கொள்ளும் தன்மை சாணிக்கு உண்டு.

கிராமத்தில் அனேகமாக எல்லா வீடுகளில் பசு மாடுதான் வளர்ப்பார்கள். விவசாயிகளின் வீடுகளில்தான் நாம்பன் மாடுகளைக் காணமுடியும் (காளை மாடுகளை நாம்பன் மாடு என்று சொல்வதும் கிராமத்து வழக்கம்) வீதியின் கரையோரங்களில் வளர்ந்திருக்கும் நெருஞ்சி முட்கள் காலில் குத்திவிட்டால், கிராமத்தில் உள்ளவர்கள் மாடு சாணி



போட்டவுடன் அதில் முள்ளுக் குத்திய அந்தக் கால்களை வைப்பார்கள்! காரணம் முள்ளின் விஷத்தை முறிக்கும் தன்மை மாட்டின் சாணத்திற்கு இருக்கின்றதாம்! ஒரு இடத்தில் புச்சிகளைக் கொல்லும் விஷமாகவும், இன்னொரு இடத்தில் முள்ளின் விஷத்தை முறிக்கும் மருந்தாகவும் விளங்கும் அதிசய சக்தியாக இருக்கின்றது மாட்டின் சாணி!.

அன்று நாம் காலையில் எழுந்ததும், மூக்கில் ஏறும் முக்கியமான வாசனைகளில் சாணியும் ஒன்றாக இருந்தது. வீடு மெழுகல் என்பது வாரத்தில் ஒருநாள் கண்டிப்பாக இருக்கும். சில வீடுகளில் வாரத்திற்கு இரண்டு நாட்களும் மெழுகுவார்கள்! இப்பொழுது நமது பிள்ளைகள் வீதியில் சாணியைக் கண்டால் காலை உயர்த்தி, கண்களை மூடி, மூக்கைப் பொத்திக் கொண்டு நடக்கின்றார்கள். ஏனெனில் இது நவீன காலம்! இப்பொழுது தவறுதலாகக்கூட யாராவது சாணியை உளக்கிவிட்டால் "ஐயோ நாத்தம்!" என்று அலறிக்கொண்டு ஓடுகின்ற அளவிற்கு சாணி எங்கள் வாழ்வில் இருந்து விலகிப் போய் விட்டது.

விஞ்ஞான ரீதியாக செயற்கை உரங்கள் வந்த பின்பு, விவசாயிகள் கூட சாணியை பயிர்களுக்கு உரமாக போடும் வழக்கத்தைக் குறைத்துக் கொண்டு






ImmoFinance
Suisse GmbH





Contact :
Selvaratnam Mathan

- புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
- வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
- சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
- முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்



076 303 22 16
mathan@gmx.ch



விட்டார்கள். அனேகமாக வீடுகளில் வளர்க்கப்படும் பசு, ஆடு, நாய் போன்றவை அந்தந்த வீட்டுக் குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகவே பராமரிக்கப்படும். சில வீடுகளில் அதற்கும் மேல் அவைகளில் பாசமாக இருப்பார்கள். எங்கள் வீட்டுப் பசு, கன்று போட்டால் எங்கள் வீட்டு நாய் அதனுடன் விளையாடும் காட்சியே அழகாயிருக்கும்.

எல்லா வீடுகளிலும் சாணியை சேகரித்து வைப்பதற்காகத் தனியான ஒரு இடமே இருக்கும். விவசாயிகள் மாதத்திற்கொரு முறை வண்டிகளில் வந்து, வீடு வீடாக விலை பேசி, சாணியை வாங்குவார்கள். அனேகமான குடும்பப் பெண்களுக்கு இதுவும் ஒரு சிறு சேமிப்பாக இருக்கும்!.

சாணி கொடுக்கும் இயற்கை உரத்தில் விளையும் உணவுகளைத் தினற மனிதனுக்கு, சீனி வருத்தம் வந்ததில்லை என்பது இயற்கை உணவு உற்பத்தியாளர்களின் வாதமாகும்.

நவீன மருந்துகளால் விளைவிக்கப்படும் உணவுகள் விசமாகிப் போன பின்னர்தான் சாணியின் பெருமையை நம்மால் உணர முடிகின்றது!. லட்சக் கணக்கில் பணத்தைக் கொட்டி கட்டியெழுப்பும் வீடுகளில், ஓலையால் வேய்ந்த மண் வீடுகளில் கிடைக்கின்ற சுத்தமும், சுகாதாரமும் கிடைப்பதில்லை! மண் தரையில், மண்சுவரில் பூசப்படுகின்ற சாணத்தின் வாசனைகளும், சுவாத்தியமும், மனிதர்களின் சிந்தனைகளையும், சந்தோசமாகவே வைத்திருக்கின்றது. சின்னச் சின்ன உராய்வுகளுக்குக்கூட பூசுவதற்கு கிரீம் வகைகள் மலிந்துவிட்ட காலத்தில் சாணியின் மருத்துவமெல்லாம் அநாகாரீகமாக மாறிவிட்டது!.

எங்கள் அயலில் அன்று ஐந்து கல் வீடுகளே இருந்தன. மீதி அனைத்தும் மண் வீடுகள்தான் (இன்று மண் வீடுகளே இல்லை! அனைத்தும் கல் வீடுகள்தன்!) கல்வீட்டிலுள்ள அந்த ஐந்து வீடுகளிலும்தான் மாடு வளர்த்தார்கள்! இததில் இரண்டு வீடுகள் தங்கள் வீட்டுப் பால் தேவைகளுக்காக மாடு வளர்ப்பவர்கள் (அதில் எங்கள் வீடும் ஒன்று) மற்ற மூன்று வீட்டினரும் தங்கள் தேவையுடன், பால் வியாபாரமும் செய்பவர்கள். இந்த ஐந்து வீட்டினருக்கும் வீடு மெழுகுவதற்காக சாணி தேவையில்லை!.

ஆனால், ஏனைய மற்ற வீட்டினருக்கு



சாணியின் தேவை அவசியமாக இருந்தாலும், அவர்கள் மாடு வளர்காததற்கு முக்கிய இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது பொருளாதாரப் பிச்சனை. இரண்டாவது இடவசதி இல்லாதமை. இவர்கள் தங்கள் வீட்டுச் சாணியின் தேவையை, இந்த மாடு வளர்க்கும் ஐந்து வீட்டில் ஏதாவது ஒரு வீட்டில்தான் பெறவேண்டும். சாணி விற்பனை செய்கின்ற பொருள் என்பதால், மற்றவர்களை சாணி அள்ளுவதற்கு எவரும் விடமாட்டார்கள்!

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையிலும், எங்கள் வீட்டில் இரண்டு குடும்பத்திற்கு சாணி அள்ளுவதற்கு அனுமதி உண்டு! எப்படி என்றால். எங்கள் வீட்டு அடுப்படிக்கு (சமையலறை) வெளிப் பக்கத்தில் எப்பொழுதும் ஒரு வாளி இருக்கும். அரிசி கழுவும் தண்ணி, சோறு வடிக்கும் கஞ்சி, மற்றும் காய்கறி வெட்டும்போது கிடைக்கும் கழிவுகள், மற்றும் பழைய சோத்துத் தண்ணீர் இப்படியாக எவையெல்லாம் வீணாக கழிகின்றதோ, அவையெல்லாம் அந்த வாளிக்குள் ஊற்றி, சேகரித்து வைத்து, மதியம் அதற்குள் பிண்ணாக்கும், தவிடும் போட்டு ஊறவைத்து, மதியம் எங்கள் வீட்டு மாடுகளுக்கு உணவாக்கிக் கொள்வோம்.

இதேபோல எங்களிடம் சாணி எடுக்கவரும் அந்த இரண்டு குடும்பங்களும், தங்கள் வீட்டில் சேரும் இப்படியான கழிவு நீரையெல்லாம் எங்களுக்குத் தருவார்கள். அவை மாடுகளின் இரவுச் சாப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும். இப்படியாக பண்டமாற்று மூலம் மற்ற வீடுகளில் சாணி வாங்கும் குடும்பங்களும் உண்டு.

கோவில்களில் கொடியேறி விட்டால் அனேகமாக எல்லா வீடுகளும் எல்லா நாட்களும் வீடுகளை மெழுகுவார்கள். அப்படியான நாட்களில் மாட்டுச் சாணத்திற்கு கிராக்கி ஏற்பட்டுவிடும்! பலரும் அதிகாலையிலேயே வந்து காவல் நிற்பார்கள்! முன்னுக்கு வந்தவர்கள் இருக்கும் சாணியை பங்கிட்டுக் கொள்வார்கள். கிடைக்காத மற்றவர்கள் மாடு சாணி போடும் வரை காவல் இருந்து எடுத்துச் செல்வார்கள்!.

எழுதப் படிக்கத் தெரியாத கிழவிகளெல்லாம் சாணியால் மெழுகுவதே தனி அழகு! சுவர்களில் சித்திர வேலை செய்தது போல் இருக்கும்! கை,விரல்களாலேயே சாணியில் எத்தனை விதமான ஒவியங்கள் வரைவார்கள்? தென்னம் ஓலை வரைவார்கள், பூக்கள்...




V one DISTRIBUTION

**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

Handy Verträge ab 1,- €
Handy Zubehör
Handys
Handy Reparatur
Festnetz DSL
Prepaid SIM
Prepaid Guthaben

KFZ Gutachten
Passbilder
Event Fotos& Videos

Privat Kredit

Handy Versicherung
KFZ Versicherung
Haftplicht Versicherung
und vieles mehr...

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
MoneyGram
unitymedia
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
1&1
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T Mobile
O2
otelo

மொட்டுக்கள் என அழகாக வரைவார்கள்!.

இப்படியெல்லாம் செய்வதற்கு, வீட்டிற்கு பூசுவதற்கு பெயின்ற் கரைப்பது போல சாணியை மை, போலக் கரைத்து, வீட்டின் தரையில் ஊற்றி, குத்துக்காலிட்டு, ஊர்ந்து ஊர்ந்து மெழுகும் பெண்களின் முதுகில் இயல்பிலேயே வளைந்த வளைவுதான் இயற்கையில் கிடைத்த அழகு. எந்த அழகு நிலையங்களுக்கும் போகாமல், உடலின் வளைவுகளை வடித்தெடுக்க இந்த மெழுகலும் அவர்களுக்கு உதவியிருக்கின்றது.

எங்கள் வீடு கல்வீடாக இருந்த போதும், ஒரு அறை மண்தரையாகவே வைத்திருந்தார்கள். வெள்ளிக் கிழமைகளில் அதை மெழுகுவது மட்டுமல்ல முத்தம்,



மற்றும் மாட்டுத் தொழுவம் உள்ள பகுதியெல்லாம் கூட்டிப் பெருக்கிவிட்டு, சாணித் தண்ணி கரைத்துத் தெளிக்க வேண்டும் என்பது எழுதாதச் சட்டமாக இருந்தது.

வீட்டைச் சுற்றித் தெளிக்கும் சாணித் தண்ணீர்கள் வளர்ந்து நிற்கும் செடிகளில் விழும்போது, செடிகளெல்லாம் நன்றியால் துதிபாடுவதை அவை பசுமையாக நிற்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். இலைகளில் மறைந்து வாழும் பூச்சி, புழுக்கள் அனைத்துக்கும் இந்த சாணித் தண்ணீர் பரம எதிரியாகும்! அப்படியானால் செடிகள் நன்றி சொல்லாதா என்ன? அப்போது பல வீடுகளில் இந்தச் சாணியின் அருமை தெரியாமலேயே பாவித்தவர்களும் இருக்கின்றார்கள்.

இன்று பல வீடுகளிலும் காணிகளைப் பிள்ளைகள் பங்கிட்டு பிரித்துக் கொண்டதால் வீடுகள் பெருகி, மாடு வளர்ப்பதற்கு நிலங்கள் இல்லாமல் போய்விட்டது. இருக்கும் கொஞ்ச நிலங்களும் அழகிற்காக பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டதால், புல் வளரக்கூட நிலமில்லாமல் போய்விட்டது. இன்றைய தலைமுறையினர் சாணியைப் பற்றி கதைத்தால் சிரிக்கின்றார்கள்!. ஆனால், நாம் தொலைந்து விட்ட ஒவ்வொரு பண்பாட்டிலும், மனித அழகியலின் உயிர் நாதம் அற்றுப் போகின்றதென்பதை நாம் ஒத்து கொள்ளத்தான் வேண்டும்.

சாணித் தரையில் வாழ்ந்தவர்கள் தங்கள் முதுமைக் காலம் வரைக்கும் ஆரோக்கியமாகவே வாழ்ந்தார்கள். இன்றைய நவீனத்தில் முப்பது வயதிற்கு மேல் ஆரோக்கியம் செத்துப் போகின்றது. இதற்கு நாம் சாப்பிடும் உணவு முறைகள் முக்கிய பங்காற்றுகின்றன! எல்லாம் வேகமாக நடைபெற வேண்டும் என்கின்ற அவசரத்தில், சாப்பிட விளைவிக்கின்ற பயிர்களிற்கு கொடுக்கின்ற உரங்களும், விஷம் கலந்துவிட்ட பிறகு எதை வளர்ச்சியெனக் கொண்டாடுவது? நவீன உரங்களின் மூலமாக மண்ணையும் கெடுத்து, நம் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

என்ன ஆன போதும் முறையாக விளைந்த அரிசியின் பழைய சோத்துக் கஞ்சியை மண் சட்டியில் கலக்கிக் குடித்தபோது கிடைத்த சுகமும், ஆரோக்கியமும், அங்கு ஒட்டிக் கிடந்த சாணியின் மணம் கொடுத்த சுகமும், புல்வெளியில் மேய்ந்த பசுக்கள் கொடுத்த ஆனந்தத்தையும், இப்போதைய வாழ்வு கொடுக்கவில்லையே! என மூத்த கிழம் ஒன்று சொல்லுவதைக் கேட்டு எங்கள் மனமும்தான் வலிக்கின்றது.



வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்றொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



## PC Systems

ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

**CHF 695.- inkl. MwSt**



## Note Books

AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

**Sehr Schnelle Lieferung!**
**Hauslieferungen**
**Vor-Ort Installationen**
**Netzwerklösungen für Firmen**
**Reparaturen aller Marken!**

**iPhone Reparaturen**
www.iphonefan.ch

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

**பகுதி.21**
**சென்ற மாத தொடர்ச்சி...**

விவசாயத் துறையின் தவறான அணுகுமுறைக்கு எதிர்ப்பு கிளம்பும் தருவாயில், வெளிநாட்டு உளவு நிறுவனங்களின் விவசாயத்தில் பாண்டித்தியம் பெற்றவர்கள் போன்று தம்மைக் காட்டிக் கொள்வார்கள், விவசாயத்துறை அமைச்சர், அதிகாரிகள் இன்னும் விவசாயத்துறை சார்ந்த கல்வியிலாளர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, பல்கிப் பெருகி வரும் சனத்தொகையின் அளவுக்கு ஏற்ற மாதிரி உணவு உற்பத்தி வேண்டுமெனில், தம்மால் அறிமுகப்படுத்தப்படும் விவசாய முறையே சிறந்தது என்பதை ஆணித்தரமாக வைப்பதுடன், அப்பயிர்ப் பலன்களால் மனித உடலுக்கோ, அவர்களின் ஆரோக்கியத்திற்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதையும் தெளிவாகப் புரிய வைப்பார்கள்.

ஒரு பொய்யை உண்மையாக்குகின்ற வாதத்திறமையும், மூலகக்கூறுகளின் தீமையைக்கூட நன்மையானது என நம்ப வைக்கும் புத்திசாலித்தனமும் உளவு நிறுவன ஒற்றர்கள் பயிற்சிகள் மூலம் பெற்றிருப்பார்கள்.

> “ஒரு நாட்டினுடைய சமூக, பொருளாதார கட்டமைப்பு என்பது அந்த நாட்டினுடைய முதுகெலும்பு போன்றது.”

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்



- அவதானி

அவர்கள் பொய் சொல்கிறார்கள் எனத் தெரிந்திருந்தும்கூட, அதனை நிரூபிக்கக்கூடிய எந்தவிதமான எடுகோள்களும் சுதேச அதிகாரிகளிடம் இருக்கவே இருக்காது.தமக்கு இத்தகு விவசாய முறை தேவையில்லையென்று நேரிடையாகவோ, இராஜதந்திர முறையிலோ சொல்லக்கூடிய திராணியற்றவர்களாக அமைச்சரில் தொடங்கி, அதிகாரிகள் வரை விலை போயிருப்பார்கள்.

ஒரு பெரும் சமுத்திரத்தில் உள்ள மீன்கள் அனைத்தையும் பிடிப்பதற்காக இராட்சத வலையை விரித்திருப்பது போல, ஒரு நாட்டினுடைய அனைத்துக் கட்டமைப்புகள் மீதும் உளவு நிறுவனங்கள் சதிவலையை விரித்திருப்பார்கள். எந்த நீக்கலுக்கூடாகவும் தப்பித்துக் கொள்ள முடியாதவாறு அனைத்துக் கட்டமைப்பு அமைச்சர்கள், அதிகாரிகள் விலை போயிருப்பார்கள். வளர்முக நாடுகளையும், வளர எத்தனிக்கும் நாடுகளையும் பலவிதத்திலும் நலிவுறச் செய்வதே சர்வாதிகார நாடுகளின் குறிக்கோளாகும்.

சர்வாதிகார நாடுகள் தமக்குள்ளே சமஅளவு உட்கட்டமைப்பைக் கொண்டிருந்த போதும்கூட, கூட ஒன்றுக் கொன்றை அனைத்து வழிகளிலும் சிதிலமடையச் செய்வதற்காக பனிப் போரை நடத்தி வருகின்றன.


பொது உலகிற்கு ஒன்றக்கொன்று ஒற்றுமை என்ற முகத்தையும், உள்ளுக்குள் கறுவிக் கொள்ளும் மனப்பான்மையையும் அவை கொண்டிருக்கின்றன. சொல்லப் போனால் பலதட்டு மனப்பான்மையை அவை கொண்டிருக்கின்றன. ஒரு நாடு அது வளமிக்க நாடாயிருந்தாலென்ன? வளரத் துடிக்கும் நாடாயிருந்தாலென்ன? கணிணியுக தொழில் நுட்பத் துறையில் பாரிய வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும்கூட, விவசாயத்துறையில் நலிவுறுமனால், வெளிநாடுகளிலிருந்து உணவுக்காக கையேந்தும் பிச்சைக்கார நாடாக மாறியே தீரும். அதனால்தான் ஒரு நாட்டின் கட்டமைப்புகளில் விவசாய கட்டமைப்பு மீது உளவு நிறுவனங்கள் அதீத கவனம் செலுத்துகின்றன.

நவீன தொழில் நுட்பம் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தவிர்க்க முடியாத நிலையாக்குவதில் உலகம் வெற்றி கண்டுள்ளது. ஒருவனுக்கு ஒரு கிலோ சுத்தமான அரிசி கிடைக்காத போது, பலவாயிரம் பெறுமதியான கைத்தொலைபேசியால் அவனுக்கு என்ன பயன்?.

ஒரு நாட்டினுடைய அதிஉயர் செல்வம் என்பதே "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கொப்ப, ஆரோக்கியமான ஒவ்வொரு தனிமனிதனுமே ஒரு நாட்டினுடைய பெறுமதியான செல்வமாகும்.

மனிதனின் உடல்நலம் குன்றினால் நாடு சீரழியும். உளவு நிறுவனங்களின் மர்மமுடிச்சுக்கள் சாதாரண மனிதனுக்கு தெரிவதே இல்லை. ஒரு நாட்டினுடைய கழுத்தை நெரிக்கும் உளவு நிறுவன முடிச்சு எங்கோயோ ஒரு நாட்டில் இருக்கும்.

(தொடரும்)



# Swiss Life
## Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

**சுவிசில் சொந்த வீடு வாங்க**

**விரும்பும் உறவுகளே!**

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்

**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

Cicero Member ID 15787
www.cicero.ch

So fängt Zukunft an.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















# உளம்
## திறக்கும் உண்மைகள்



### உணவே கடவுள்

கோலங்கள் இடப்படும்
முற்றங்களிலேயே
கோபுரம் தரிசனம்
கிடைத்துவிடுகிறது,
எறும்புக்கு..



### உலகம்

யாரோ ஒருவரின் வேதனையே
மற்றவருக்கு மகிழ்ச்சி..
உலகம் இருபக்கங்களை
எப்போதும் வைத்திருக்கும்.



### கடினஉழைப்பு

இமைகளை மூடுவதால்
இருள் சூழ்ந்துவிடாது
கனவோடு வாழ்ந்தால் மட்டும்
காலம் கனிந்துவிடாது.

### மனிதர்கள்

எழுதப்படாத
எத்தனையோ காவியங்கள்
இங்கே நடமாடுகின்றன.
நாம் தான் கண்டுகொள்வதில்லை

### நேரம்

நேரம் மட்டும்
மனிதனைத் துரத்தாவிட்டால்
இங்கே எல்லோரும்
சோம்பேறிகளே



"உளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

## கல்வி

கல்வி என்பது
கண்ணுள்ள மாந்தர்க்கு
கலங்கரை விளக்கே- அன்றிக்
காண்பவர் ஒப்பிட்டுக்
கதைபல பேசிடக்
கருப்பொருள் அல்ல !!!

## கவலும் உள்ளம்

கண்டம்பல கடந்து
கட்டுக்கதைகள் பேசி- அடுத்தவரைக்
கலங்கவைத்துக்
கண்குளிரக் காண்பதில்
களிப்படைந்திடும்
கல்லாக்கழி மக்களே!

## வலிசுமந்த வரிகள்

வந்துதித்து விட்டோம் வையகத்தில் தமிழராய்
வரமா சாபமா என வகுத்தறிய வழியின்றி
வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும்
வசைபாடும் தமிழினத்தின்
வஞ்சக வலையில் வீழ்ந்து
வலுவிழந்துவிட்டோம் நாம்!



## திறன்

ஒவ்வொரு மாந்தனுள்ளும்
ஒவ்வொரு திறனுண்டு
ஒவ்வொரு திறனிலும்
ஒவ்வொரு சிறப்புண்டு!- எனவே
ஒருபோதும் எனை யாருடனும்
ஒப்பீடு செய்யாதே !!!

**தேசா**

# அகர கவிக்களம்....

## வேலி வேலி

*வாழ்வரண் காப்பரண் வேலியிட்டு*
*வையத்தில் பற்பல தடை வேலி தாண்டி*
*முள்கம்பி வேலிக்குள் முடங்கி வாழ்ந்து*
*இணையவேலிக்குள் இன்று ஒன்றி*
*உலகவேலியின் கதவுதட்டும்*
*உயிர்ப்புள்ள தமிழினம் நாமன்றோ!*
*நன்றி*

*நமக்கு நாம் இடும்வேலி*
*நம்பிக்கை வளர்க்கும் புதுவேலி*
*உரமாய் படரும் உளவேலி*
*உலகிற்கு இதுவே முதலாளி*
*நன்றி*

**வசந்தா ஜெகதீசன்**



ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப்போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

## இனி நாம் செய்யவேண்டியது என்ன?

பாகம் –6

இறுதிப் போருக்குப்பின் இப்பொழுது, எது போன்ற உத்திகள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியவில்லை. நான் பார்த்த அளவில் "ஒரு நல்ல தலைமை" கிடைத்தால்தான் நம்மால் மீண்டும் எழ முடியும் என்ற சிந்தனைகளை அடிக்கடிப் பார்க்கிறேன். இது பரிணாம உத்தியின் பார்வையில் பிழையான தத்துவம். இதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அவற்றைப் பற்றி தனிக் கட்டுரை எழுதியிருக்கிறேன். நாம் எதிர்நோக்கும் சிக்கல் என்பது அறிவுச்சிக்கல். ஈழத்தை எப்படி அடைவது? என்பதற்கான அறிவு யாரிடமும் இல்லை. இதுபோன்ற சிக்கல்களுக்கு பரிணாம உத்தி ஒன்றுதான் வேலை செய்யும். நல்ல தலைமையைக் கூட பரிணாம உத்தியின்படிதான் கண்டறிய முடியும்.

பரிணாம உத்தியை தமிழ்த் தேசியத்திற்கு எவ்வாறு பயன்படுத்துவது? சிக்கலான தகவமையும் அமைப்புகளைப் (*Complex Adaptive Systems*) பற்றிய ஆராய்ச்சிகள் இதற்கான முறையை அளிக்கிறது. அதை தமிழ்த் தேசியத்திற்கு கீழ்வருமாறு பயன்படுத்தலாம். இது

சிக்கலானது அல்ல, மூன்று எளிமையான விதிகள் போதுமானது.

**விதி 1 :** முதலில் பரிணாமப் போட்டிக்கான விதிமுறைகளைப் பட்டியலிட வேண்டும். கண்டிப்பாகத் தேவையான விதிமுறைகள் மட்டுமே இருக்க வேண்டும். தேவையற்ற விதிமுறைகள் பரிணாமத்தைப் பாதிக்கும். எவ்வளவு குறைவான விதிகள் உள்ளதோ! அவ்வளவு நல்லது. அனைத்து தமிழ்த் தேசிய இயக்கங்களும் இந்த விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

இவற்றை மீறினால், அவர்கள் ஆட்டத்தில் இல்லை, அவர்களுடன் மற்ற இயக்கங்கள் ஒத்துழைக்கக் கூடாது. ஆனால், அவர்களை தோற்கடிக்க முயலவேண்டும். இந்த விதிகள் ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியது. இப்பொழுது எனது எண்ணத்தில் தோன்றியதைப் பகிர்கிறேன். இவை எதிர்காலத்தில் மாறலாம்.

புலிகளை உணர்வுப்பூர்வமாக இணைத்துப் போராட வைத்தது மாவீரர்களின் நினைவுதான். உணர்வுகள்தான் மனிதனை இயக்கும் சக்தி; பகுத்தறிவு உணர்வுகளுக்கு அடிமை. அதனால், தமிழ்த் தேசிய உணர்வுதான் இயக்கங்களுக்கு அடிப்படையாக இருக்க வேண்டியது. அதை எடைபோடும் ஒரே கருவி என்பது அவர்கள் குடும்பத்துடன் மாவீரர் நிகழ்வுகளை அனுசரிக்கிறார்களா? என்பதே.

நூறு பொய்கள் சொல்லி ஏமாற்ற முடியும். ஆனால், தொடர்ந்து உணர்வுகளால் இணைக்கும் சடங்குகளை ஏமாற்ற முடியாது. அதனால் பரிணாமப் போட்டியின் விதி என்பது ஒன்றே ஒன்றுதான். அனைத்து இயக்கங்களும், அவற்றில் உள்ளவர்களும், மாவீரர் நாளையும் மற்ற முக்கியமான நினைவு நாட்களையும் குடும்பத்துடன் அனுசரிக்க வேண்டும்.




**விதி 2 :** பல்வேறு அமைப்புகளிடையே போட்டியை உருவாக்க வேண்டும். அது அரசியல் முதல் எந்தத் துறையாகவும் இருக்கலாம். எது சரியான பாதை? என்பதைப் பரிணாமம் தீர்மானிக்கட்டும். முயற்சிகள் எவ்வளவு புதுமையோ அவ்வளவு நல்லது. முயற்சிகள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தால், கூடுதல் சிறப்பு. பரிணாமத்தில் முரண் என்று எதுவும் இல்லை. வெற்றி



Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும்
உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்
மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...


திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து
வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை
அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
| --- | --- | --- |
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com

என்பது மட்டுமே பரிணாமத்தில் முக்கியமானது. பெரும்பாலான முயற்சிகள் தோற்கும். அது ஏற்புடையதே, அதிலிருந்து கற்றுதான் மற்ற அமைப்புகள் வெற்றி அடையும். தோல்வியுற்ற அமைப்புகளும் கொண்டாடப்பட வேண்டியவையே!.

அமைப்புகள் தேவையான இடத்தில் ஒத்துழைக்க வேண்டும், தேவையான இடத்தில் முரண்பட வேண்டும். தனித்து இயங்குவதுதான் சிறப்பானது என்றால் தனித்து இயங்கவேண்டும். அவ்வாறு தனித்து இயங்கினால், ஒரு அமைப்பிற்கு ஏற்படும் பாதிப்பு, இன்னொரு அமைப்பைப் பாதிக்காது. அனைத்து அமைப்புகளும் சேர்ந்து ஒரு பொதுவான தலைமையின் கீழ் இயங்கினால், ஒரு சிறு தவறின் மூலம் மொத்தமும் அழியும். பொதுவான தலைமை என்பது கூடாது.

ஒவ்வொரு அமைப்பும் அதற்கான தலைமையுடன் தனித்து இயங்கும். ஓர் அமைப்பு நினைத்தால் இன்னொரு அமைப்புடன் இணைந்து கொள்ளலாம். ஒன்றிணைத்து செயல்பட தலைமை தேவைப்பட்டால், தேவைக்கேற்றபடி தலைமைத் தானாக பரிணமிக்கும். வாய்ப்பு இருக்கும் இடத்தில் எல்லாம் புதிது புதிதாக அமைப்புகள் தோன்றிக் கொண்டே இருக்கவேண்டும். புதிய அமைப்புகளை மக்களோ அல்லது மற்ற அமைப்புகளோ உருவாக்கலாம்.

**விதி 3.** இந்த ஆட்டத்தில் வெற்றியாளரை தேர்ந்தெடுக்கும் நடுவர்கள் மக்களும் அமைப்புகளுமே!. எந்த அமைப்புகளை அவர்கள் ஆதரிக்கிறார்களோ, அவர்கள் வளர்வார்கள். எவை எதிரிக்கு எதிராகத் தாக்குப்பிடித்து வெற்றி அடைகிறார்களோ, அவர்களுக்கு மக்களின் ஆதரவு பெருகும். மொத்தத்தில் ஓர் அமைப்பின் வெற்றியைத் தீர்மானிப்பது அவ்வமைப்பு தனது




சூழலுக்கு ஏற்று, சிறப்பாகச் செயல்படுகிறதா என்பதே!.

இந்த ஆட்டத்தை ஒழுங்குபடுத்திச் செயல்படுத்த தலைமை எதுவும் தேவை இல்லை. மக்களும் போட்டிபோடும் அமைப்புகளும் தாங்களே இந்த மூன்று பரிணாம விதிகளின்படி ஒழுங்குபடுத்திக் கொள்வார்கள். இதைப் பரிணாமத் தத்துவத்தில் சுயஒழுங்கு ***(Self Organization)*** என்று அழைக்கிறார்கள். இதன் மூலம்தான் யாரின் மேற்பார்வையும் இல்லாமல் உயிர்கள் பரிணமித்தன. அதுபோலத்தான் நாம் உருவாக்கும் இயக்கங்களும் பரிணமிக்கவேண்டும்.

இந்தப் பரிணாம உத்தியைக் கொண்டு நமக்குத் தேவையான சிறப்பான அமைப்புகளைப் பரிணமித்து உருவாக்கலாம். நாம் பயன்படுத்தும் பரிணாம உத்தி, அடுக்கடுக்காக பல்வேறு அமைப்புகளையும், கிளைகளையும் உருவாக்கும். அவை தேவைப்பட்டால் இணைந்து இயங்கும் அல்லது தனித்து இயங்கும்.

எவ்வாறு நமது உடலில் வெவ்வேறு உறுப்புகள் பரிணமித்து இணைந்து இயங்குகின்றனவோ, அதைப்போல நாம் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கேற்றவாறு அமைப்புகள் பரிணமிக்கும். புலிகள் தெரிந்தோ தெரியாமலோ போர்த் துறையில் மட்டும் இவ்வுத்தியை பயன்படுத்தினர். நாம் அனைத்துத் துறைகளிலும் வலிந்து பயன்படுத்த வேண்டும்.

பல்வேறு அமைப்புகள் இருப்பதால், ஒன்றின் தோல்வி நம்மைப் பெரிதாக பாதிக்காது. உதாரணமாக பரிணாமம் நமக்கு, இரண்டு கண்கள், கைகள் கால்கள் என இரட்டிப்பாக உருவாக்கியதால், ஒன்றை இழப்பதால் நாம் முற்றும் செயலிழப்பதில்லை. அதுபோல ஒரு அமைப்பின் அழிவை இன்னொன்று ஈடுகட்டும். விரைவில் அத்தோல்வியிலிருந்து கற்று, புதிய அமைப்புகள் உருவாகி, முன்பைவிடச் சிறப்பாக செயலாற்றும். எந்த ஒரு தனி அமைப்பின் தோல்வி என்பது பெரிய பின்னடைவை உருவாக்காது.


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


இதை எங்கிருந்து ஆரம்பிப்பது? என்ற கேள்வி எழும். தமிழ்த் தேசிய உணர்வுள்ள மக்கள்தான் இந்த உத்திக்கு அடிப்படை (விதி 1) என்பதால், முதலில் அவர்களை உருவாக்குவதுதான் முக்கியமானது. இன்று தமிழகத்தில் பெரும்பாலான மக்கள் உணர்வுகளற்று இருக்கிறார்கள். எத்தனை வீடுகளில் மாவீரர் நாள் அனுசரிக்கப்படுகிறது? ஒருமித்த உணர்வுள்ள மக்கள் கூட்டத்தை உருவாக்குவதற்குத்தான் முதலில் பரிணாம உத்தியைப் பயன்படுத்த வேண்டும். இதனை பற்றி பகுதி-1 இல் எவ்வாறு புலிகளின் வரலாற்றுக் கற்பிதங்கள் இதற்குத் துணைபுரியும் என்று விரிவாகப் பார்த்தோம்.

பல்வேறு பண்பாட்டு அமைப்புகளை உருவாக்கி, அவர்களுக்குள் போட்டியை உருவாக்க வேண்டும். எவை உணர்வுப்பூர்வமாக மக்களை இணைக்கிறதோ, அவைத் தாமாக வெற்றி பெறும். உதாரணமாக யூதர்கள் இவ்வாறு பல்வேறுபட்ட பண்பாட்டு அமைப்புகளை உருவாக்கி, தங்களைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் அவர்களுக்கு ஈராயிரம் ஆண்டுகளாக நாடும் இல்லை, தலைமையும் இல்லை.

எங்கெங்கெல்லாம் சிக்கல்கள் தோன்றுகிறதோ, அங்கெல்லாம் பல்வேறு அமைப்புகளை அமைத்து போட்டியை

# Jaffna Stores

Geschäftsführer : Herr Thayaharan Nadarajah







தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள்,
இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**



# IMPORTAS
Cash & Carry

தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...



## பேர்ண் நகரில்
# புதிய உதயம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
“இம்போட்தாஸ்” நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது

**Kranichweg 8, 3074**
**Muri Bei Bern**
**☎ 031 951 24 44**

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55  Fax : +41 43 343 03 56
email : info@importas.ch  Web : www.importas.ch

உருவாக்க வேண்டும். இவையெல்லாம் உடனடியாக நடப்பதல்ல. புலிகள் பரிணமித்து, பலமாக வெற்றி பெற எவ்வளவு காலமானதோ, அதுபோல ஆகும். அதனால் இவ்விதியை நீண்டகால நோக்கில் பயன்படுத்த வேண்டும். பரிணாம உத்தி என்பது அடிப்படையில் அறிவை உருவாக்கும் உத்தி.

புலிகள் போர்த்துறையில் அறிவைப் படைத்துக் கொண்டிருந்தார்கள். அதுதான் அவர்களை வெற்றியின் உச்சிக்கு கொண்டு சென்றது. அதுபோல நாம் ஈடுபடும் அனைத்துத் துறைகளிலும் புதிய அறிவைப் படைத்துக் கொண்டே இருக்க வேண்டும். நாம் வெற்றி பெறுவது நாம் பெரும் அறிவினிலேயே உள்ளது. அறிவியல் பூர்வமாகச் சிந்தித்து, எங்கெல்லாம் வாய்ப்புகள் உள்ளன? அடுத்து எடுப்பதற்கு எது நல்ல அடி? எது போன்ற உத்திகள் சிறப்பானவை? என்று மாறும் சூழலுக்கு ஏற்ப தொடர்ந்து ஆராயப்பட வேண்டியது.

அதற்கேற்ற ஆராய்ச்சி அமைப்புகளைத் தோற்றுவித்து, அவர்களுக்குள்ளும் போட்டியை உருவாக்க வேண்டும். மக்கள் அனைவருக்கும் இந்த பரிணாம உத்தி கற்பிக்கப்பட்டு, பரிணாமம் என்பது நமது பண்பாட்டு பழக்கவழக்கமாக மாற்ற வேண்டும். அதற்கு நாம் ஓர் அறிவார்ந்த சமூகமாக மாற வேண்டியுள்ளது. அதற்கேற்ற கல்வி அமைப்புகளை உருவாக்குவது அவசியமானது. அவற்றையும் பரிணாம உத்தியின் மூலம் உருவாக்கலாம்.

இவ்வாறு போட்டியை உருவாக்குவது, ஒவ்வொரு அமைப்பும் ஒவ்வொரு திசையில் இழுத்து, முன்னேற்றத்தைத் தடுக்கலாம் என்று




நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவ்வாறு நடக்கப் போவதில்லை. இதற்குக் காரணமாக நான் வைப்பது :

இந்த பரிணாம உத்தியின் அடிப்படை என்பது போட்டி அல்ல, கற்றலே அடிப்படை. போட்டி என்பது கற்றலுக்குத் துணைபுரிகிறது. அமைப்புகள் அனைத்தும் குருட்டுத் தனத்தில் நாம் உருவாக்கப் போவதில்லை. நன்றாக கற்றறிந்து, பயனுள்ள உத்திகளை கண்டறிந்து, அவற்றில் எது உகந்ததோ அவைதான் இயக்கங்களாக உருவாகும். அவ்வாறு உருவாகும் இயக்கங்களுக்குள் போட்டி இருக்கும்.

எவ்வாறு அறிவியலாளர்களுக்குள் ஏற்படும் போட்டி அறிவியல் முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறதோ, அதைப் போன்ற முன்னேற்றத்தை நோக்கி போட்டியை உருவாக்கவேண்டும்.

பரிணாம உத்தியில் எந்த விதிகளின் அடிப்படையில் (விதி-1) அமைப்புகள் போட்டி போடுகின்றன என்பதை சரியாக அமைப்பதின் மூலம், அமைப்புகளை முன்னேற்றத்தை நோக்கி செலுத்தலாம்.

பரிணாம உத்தியை ஓர் அமைப்பிற்குள்ளும் செயல்படுத்தலாம். உதாரணமாக கூகிள் *(Google)* நிறுவனம் வெவ்வேறு குழுக்களை உருவாக்கி, வெவ்வேறு கண்டுபிடிப்புகளைச் செய்கிறது. அவற்றில் 80% கண்டுபிடிப்புகள் தோல்வி அடைகிறது. ஆனால், வெற்றி பெரும் கண்டுபிடிப்புகளினால் வரும் இலாபம் மிக அதிகமானது.

இந்த பரிணாம உத்தியின் மூலமே கூகிள் கற்று முன்னேறுகிறது. அதனால் போட்டி என்பது பின்னடைவைக் கொடுக்கும் என்று பயம் கொள்ளத் தேவையில்லை. அவ்வாறு சில அமைப்புகள் தவறான பாதையில் செல்லும் பொழுது, மற்ற இயக்கங்கள் இந்த இழப்பை ஈடுகட்டும். அவ்வாறு இல்லாமல் நாம் ஒரே இயக்கம் மட்டுமே உருவாக்கினால், அதன் இழப்பை ஈடுகட்டுவது கடினம்.

இக்கட்டுரையில் நான் விளக்கிய 'பரிணாம உத்தி' என்பது மேலோட்டமானது. இதைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. அவற்றைக் கற்று தெளிந்து செயல்படவேண்டும். இக்கட்டுரையை எப்படி முடிப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது நண்பர் பரணி கிருஷ்ண ரஜனி கீழ்வரும் வாசகத்தைப் முகநூலில் பதிவிட்டார்:

**"பாதையைத் தேடாதே, உருவாக்கு"** தேசியத் தலைவர். 2019 விடுதலைக்கான ஆண்டு

இந்த வாசகத்தை பலமுறை பார்த்திருக்கிறேன், ஆனால் அப்பொழுதெல்லாம் அதன் முழுப் பொருள் விளங்கவில்லை. இந்தக் கட்டுரையின் வழியாகப் பார்க்கும் பொழுதே என்னால் முழுதுமாகப் புரிய முடிகிறது. ஈழத்தைப் பெறுவதற்கானப் பாதை என்று ஒன்று இல்லை. அதைத் திட்டமிட்டு முன்கூட்டியே அறிய முடியாது. அதை ஒவ்வொரு படியாக பரிணமித்துதான் அடையமுடியும். இதுதான் அறிவியல் பூர்வமான வெற்றிக்கான உத்தி.

பி.கு: நான் புலிகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவது, அவர்கள் செய்தது அனைத்தையும் சரி என்று நியாயப்படுத்துவது அல்ல. பல மோசமான பிழைகளும் நடந்திருக்கின்றன. நமது முன்னேற்றத்திற்குத் தேவையான நல்ல பாடங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் எனது கருத்து. உலகிலுள்ள அனைத்து நாடுகளின் வரலாற்றிலும் தவறுகள் நடந்துள்ளன. அதற்காக அவர்களின் மாவீரர்களைத் தூற்றுவதில்லை. தவறுகளை ஏற்றுக் கொள்ளுவோம், மாவீரர்களைப் போற்றுவோம்.

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles



தாலி மற்றும் பொன்னுருக்குதல், இவையாவும் இங்கு செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100 CHF என 12 மாதம் 1200 CHF இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யலாம்.

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

nfo@nsjewellery.com Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

GUARANTEE BEST PRICE GUARANTEE

உயர்தர புடவைகள் மற்றும் துணி வகைகள் வாங்க சிறந்த இடம்



Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland

## ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

**'ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்து போட்டு என்ன செய்கிறது?'**

- தமிழ் இனத் துரோகி



## சிங்களம் ஒரு புறம், முஸ்லிம்கள் மறு புறம்!

# ஈழத் தமிழர் தமது தாயகத்தை இழப்பதா?

*குமரிக் கண்டத்தில் 50,000 வருட வரலாற்றைக் கொண்டுள்ள ஈழத் தமிழ் இனம் தனது தாயக்தைப் பறி கொடுப்பதா? தமிழர் தாயகம் பற்றிப் பேச மறுக்கும் தமிழர் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவர் சம்பந்தனும் வாக்களித்த மக்களைப் பார்த்து இப்படியான பொறுப்பற்ற கேள்விகளைக் கேட்பதை எப்படி மன்னிக்க முடியும்?*

***கிழக்கு மாகாணம் காத்தான் குடியில் ஒரு அராபிய தேசமா?***

***ஈழத் தமிழ் இனம் தனது தாயக மீட்பைத் துரிதப் படுத்த வேண்டிய கட்டாய காலத்தில் உள்ளதை 2019 கத்தோலிக்கத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு இஸ்லாமிய பயங்கரவாத குண்டுத் தாக்குதல்கள் அர்த்தப்படுத்துகின்றன.***

*2009 முள்ளி வாய்க்கால் பொது மக்கள் படு கொலைகளைக் கண்டு கொண்ட உலக மனித உரிமை அமைப்புகள், ஈழத் தமிழர்கள் மீதான போரானது ஒரு இன அழிப்பே என ஏற்று, அதற்கான சர்வதேச விசாரணைகளைத் தொடர வேண்டும் எனப் பல தடவைகள் வற்புறுத்தி வந்துள்ளன. ஆயினும் உலகப் பலமிக்க அரசுகள் மற்றும் இலங்கை அரசின் ஆதரவை நாடும் பிராந்திய அரசுகளான இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் தமது சுய விருப்பங்கள், இலாபங்கள் நலன்கள் கருதி சர்வதேச விசாரணைகளைத் தடுத்தும், தவிர்த்தும் வந்துள்ளன.*

***ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரிப்பவர்கள் யாவரும் மனதால் தமிழ் இன அபிமானம் அற்ற அந்நிய நாடுகள் இனங்களின் கைக் கூலிகளாக மாறி***

**விட்டதன் காரணமாக, தமிழ் மக்களின் எந்த ஒரு அடிப்படைத் தேவைகளையும் அறியாத அல்லது அறிந்தும் அவற்றை வாயால் பேசிப் பெறும் ஆற்றல் கூட அற்றவர்களாக மாறி விட்ட நிலையே தொடருகிறது.**

மனித உரிமைகள் தொடர்பாக உலகம் உரத்துப் பேசிவரும் உண்மைகளைக் கூட உறுதிபடப் பேசி, அரசிடம் வாக்களித்த மக்களுக்கான நீதியும், நிவாரணமும், நிம்மதியான வாழ்வையும் உறுதிப்படுத்தும் எந்தவிதச் செயலையும் செய்ய முடியாத மலட்டு அரசியலை முன்னெடுத்து வருவதையே, குறிப்பாகக் கடந்த 10 ஆண்டுகளாகக் காண்கிறோம்.

இந்த இடத்தில் எமது அரசியல் ஆய்வாளர் திரு.த. எதிர்மன்ன சிங்கம் சென்ற அகரம் இதழில் "இந்தியாவால் ஈழத் தமிழ் இனம் அழிந்தது, தமிழகத் தமிழினம் தப்புமா?" என்ற தலைப்பில் வெளியான கட்டுரை, எந்த அளவுக்கு யதார்த்த நிலையை வெளிப்படுத்தியது என்பதற்கு ஆதாரமாக, இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் 5 வருடத்துக்கு நீட்டிப்பு செய்துள்ளது என்கிற செய்தி உறுதிப்படுத்தி உள்ளதைக் காணலாம்.

உயிர்த்த ஞாயிறு இஸ்லாமிய வன்முறைக்கு உள்ளான தமிழ் கத்தோலிக்க மக்கள்

இஸ்லாமிய மதத்தீவிரவாதம் கிழக்கிலே காத்தான் குடியில் மிக ஆழமாக வேரூன்றி இன்று இலங்கையில் பரவலாகத் தாக்குதல் நடத்தியதும், அதனால் வன்முறைத் தாக்குதல்கள் இலங்கை முழுவதும் பரவி விட்ட நிலையில், ஈழத் தமிழரின் தாயக மீட்புப் போராட்டம் தீவிரப் படுத்த வேண்டியக் கட்டாயத்தில் ஈழத் தமிழினம் உள்ளது.

"பனை மரத்தில் தேள் கொட்ட, தென்னை மரத்துக்கு நெறிகட்டியதாம்" என்பது போல கொழும்பிலும், கிழக்கிலும்



நடத்தப்பட்ட தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் சங்கத் தலைவரும், செயலாளரும், ஒரு உணவு விடுதி ஊழியரும் கைது செய்யப்பட்டு, நீதி மன்றத்தால் பிணையில் விடுதலையாகி உள்ளார்கள்.

"மழை விட்டும் தூவானம் போகவில்லை" என்பது போல, 2009ல் இன அழிப்புக்கு உள்ளான தமிழ் இனம் வருடங்கள் 10 கடந்த நிலையிலும் நீதி விசாரணையோ, போதிய அடிப்படை நிவாரணமோ வழங்கப்படாமல், இராணுவ ஆட்சியில் துன்புறுத்தப்படும் நிலையில் இத்தகைய அரசு தரப்பின நடவடிக்கைகளை தாங்கிப் பொறுத்துப் போகும் நிலையில் தமிழ் மக்கள் இருப்பார்கள் என அரசும், அதன் பங்காளிகளான தமிழர் தேசியக் கூட்டமைப்பும் எதிர்பார்த்தால் அது அவர்களின் தவறே அல்லாமல், தமிழ் மக்களின் தவறாக இருக்காது.

இது தொடர்பாக யாருக்கேனும் சந்தேகம் இருக்கக் கூடாது என்பதால் கொழும்பு ரெலிகிராஃப் எனும் ஆங்கில இணையத்தில் பதிவான வாசகர் கருத்துகளில் சிலவற்றை இங்கு நாம் தர விரும்புகிறோம். அவற்றின் உண்மைத் தன்மையும், கால மாற்றத்தால் மக்கள் மனதில் எழுந்துள்ள மாற்றங்களும் தனித் தமிழ் ஈழத்துக்கான அவசரமும், அவசியமும் உணருவது கடினமாக இருக்காது. **(கருத்தாளர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களது பெயர்கள் தரப்படவில்லை.)**

**கருத்து 1.** ஆம்! இந்த இந்தியர்களும், உள்துறை அமைச்சு அலுவலகமும் மலையாளிகளால் நிரம்பி உள்ளது. (இவர்கள் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பாகத்தான் தமிழ் மக்களிடம் இருந்து பிரிந்த இனம்) பிராமணர்கள் (சுப்பிரமணிய சுவாமி போன்ற சில தமிழர்களும் கூட) மற்றும் வட இந்தியர்கள் அவர்களே உருவாக்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாகவும், இந்தியாவுக்கு ஆபத்து என்கிற பொய்யான மனப்பிரமை கொண்டுள்ளனர்.

புலிகள் என்கிற வண்டியும், அவர்களால் ஆபத்து என்கிற பொய்யை அடிக்கடி கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், உண்மையில் புலிகள் உயிரோடு இருந்த காலத்தில் பலமுடனும், வடக்குக் கிழக்குப் பகுதிகளை




ஆட்சி செய்த போதிலும் இந்தியாவை இஸ்லாமிய சலாபிகளிடம் இருந்தும், இலங்கை இஸ்லாமியரின் தீவிரவாதத்தில் இருந்தும் பாதுகாத்தனர் என்பதே உண்மை யதார்த்தம்.

கெடு வாய்ப்பாக இலங்கையிலும், தமிழகத்திலும் உள்ள முஸ்லிம்களும், சிங்கள பௌத்த வெறியர்களும், சீனா பாகிஸ்தானுடன் நட்பு கொண்டு, இந்தியாவை அழிக்க விரும்பினர். விடுதலைப் புலிகள் இவ்விரு தீவிரவாதிகளையும் கட்டுக்குள் வைத்து, இந்தியாவின் தெற்குக் கரைகளை பாதுகாத்தனர்.

இப்பொழுது இந்தியா பலவீனமாக உள்ளது. உண்மையை உணருவதற்குப் பதிலாக, இந்த தமிழர் எதிர்ப்பு இந்தியர்கள் தொடர்ந்து புலிகள் எதிர்ப்புப் போர்ப் பறையை அடிக்கின்றனர். புலிகள் இந்தியாவைத் தாக்கியது ஒரே தடவை ராஜீவ் காந்தியைக் கொன்றதுதான். அதுவும் வடக்கு கிழக்கில் தமிழருக்கு இந்திய அமைதி காக்கும் படை என்ன செய்ததோ? அதற்குப் பழி வாங்கும் செயலாக. அதுவும் இல்லை என்றால், புலிகள் ஒரு பொழுதும் இந்தியாவைப் பற்றிக் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள்.

புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஈழத்தை முன்னெடுத்துச் செல்ல எல்லா உரிமைகளும் கொண்டிருக்கிறார்கள். இதனை மறுக்க இந்திய உட்துறை அலுவலக பயலுகள் யார்? ஆனால், ஒரு போதும் இல்லாத பலுச்சிஸ்தான் தாயகத்தை இப்பொழுது பாகிஸ்தானில் ஆதரிக்கிறார்கள்.

புலிகளைத் தோற்கடிப்பதில் இந்தியாவின் அசிங்கமான வகிபாகம் என்ன? என்பதையும், இலங்கை அரசாங்கத்தைப் போர்க் குற்ற விசாரணைகளில் இருந்து எப்படிச் சிங்களத்தைப் பாதுகாத்தது? என்பதையும் அறிந்திருக்கிறார்கள். எனவே புலிகளோ, புலம்பெயர் தமிழர்களோ எதுவும் பேசவேண்டியது இல்லை.

இந்திய உள்துறை அலுவலகத்தின் இத்தகைய முட்டாள்தனமான செயல்களும், அறிக்கைகளும்தான் இலங்கைத்தமிழ் மக்களிடையே இந்திய எதிர்ப்பு உணர்வுகளைத் தூண்டுகிறது.



இல்லாத புலிகள் அமைப்பும், இலங்கைத் தமிழ் மக்களும்தான் இந்தியாவுக்கு ஆபத்தானால்? இந்த ஐ.எஸ்.ஐ.எஸ் சலாபிகளும், உள்ளூர் இலங்கை முஸ்லிம்கள், அல்லது சிங்கள இனவெறியர்கள் இல்லையா? என்ன அவர்கள் பகடி பண்ணுகிறார்களா...?”

**கருத்து 2.** முன்னர் இந்த முஸ்லிம் பயலுகள், தமிழர்களைக் கொள்ளை அடிக்க இதே குண்டர்களுக்கு உதவி செய்தும், இராணுவ புலனாய்வில் உதவியும் செய்ததற்கு இப்பொழுது திரும்ப வாங்கிக் கட்டுகிறார்கள். இதை ஒரு பக்கத்தில் விடுவோம். அவர்கள் மட்டக் களப்பிலும், மன்னாரிலும் தமிழர்களின் காணிகளைச் சட்டத்துக்குப் புறம்பாக எடுத்ததைப் பற்றிக் கண்டறிய வேண்டும். அவர்கள் பொய்யான பத்திரங்களைத் தயாரிப்பதாகக் குற்றம் சாட்டப் படுகிறது. அவர்களின் குற்றச் செயல்கள் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும். முக்கியமாக முஸ்லிம் அரசியல்வாதிகளும், அவர்களின் அரசியல் கூலிகளும்.

இராணுவத்தைச் சொன்னால், அது சிங்கள இராணுவம் மட்டுமே, இலங்கை அரசின் இராணுவம் அல்ல. எனவே, இப்படித்தான் அவர்கள் பயிற்றப் பட்டிருக்கிறார்கள். பாடசாலைகள், மருத்துவமனைகள், பாதுகாப்பு வலையங்கள்தான் அவர்களின் குண்டுத் தாக்குதல் இலக்குகள்.”

இன்று உலகம் தமிழருக்கான தாயகத்தின் தேவையை உலகுக்கு உரத்துச் சொல்லும் அளவுக்கு இலங்கையின் இஸ்லாமியத் தீவிரவாதம் சூழ்நிலைகளை ஏற்படுத்தி விட்டது.

இப்பொழுது நாம் சிந்திக்க வேண்டியது, கிழக்குத் தமிழ் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய உறுதியான தீர்மானம் பற்றியது. அவர்களுக்காக நாம் எமது தனி நாட்டுக் கோரிக்கையை விட்டு விட முடியாது.

(தேடல் தொடரும்.)


லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக் கடை

ASI Boucherie
PARIS - FRANCE

வாடிக்கையாளர்கள் அதிகம் ஆனதால்
தினமும் புதிய இறைச்சிகள்!
தமிழ்வாசம் வீசும் ஐரோப்பிய
இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக் கடையின்
இறைச்சிக் கறி வாசம்

அன்பான வரவேற்பு! தினமும் புதிய இறைச்சி
வகைகளே விற்கப்படுகின்றது

ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்
சுவையான இறைச்சி உண்பதற்காக ஆசி இறைச்சிக் கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்

இது எப்படி சாத்திமாகின்றது?

தரமான இறைச்சியே விற்கப்படுவதால்
வாடிக்கையாளர்களோ அதிகம்

195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

ஆடு முழுதாகவோ
அல்லது அரையாகவோ
கிலோ 4,50€



தினமும் ஆட்டுப்பங்கு

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக்
கேட்டுப் பெறவும்

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெலி வேலுப்பிள்ளை

## வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. இனியென்ன விடுமுறை வந்திட்டுது, அங்கினை இங்கினை எண்டு எல்லாரும் ஓட வெளிக்கிட்டுருவியள். விடுமுறை எண்டுறது இயந்திர வாழ்க்கைக்கு அவசியம் பாருங்கோ. அது இல்லாமல் மனிசன் வாழ முடியாது. ஓடி ஓடி உழைக்கிற ஆட்களுக்கு விடுமுறை அவசியம். ஆனால் ஓடாமல் உழைக்கிற ஆட்களுக்கு வாழ்க்கையே விடுமுறை தான் பாருங்கோ. என்னடா உது புதுக்கதையாய் இருக்குது எண்டு யோசிக்கிறியளே?**

ஓடாமல் உழைக்கிறது எண்டால், வியர்வை சிந்தாமல் இருந்த இடத்தில இருந்து, அடுத்தவனின்ர காசை ஆட்டையைப் போட்டு உழைக்கிறதைத் தான் சொல்லுறன் பாருங்கோ. கலிகாலம் எண்டுறது உப்பிடித்தான் ஆரம்பிக்கும் எண்டு சொல்லுறாங்கள் கண்டியளோ. ஓடி ஓடி உழைக்கிறவன் அம்மணமாயும், ஓடாமல் உழைக்கிறவன் செல்வந்தனாயும் இருக்கிற நிலை தான் இனி வரும் பாருங்கோ.

உப்ப ஏன் உந்தத் தோம்பு எல்லாம் உவர் இழுக்கிறார் எண்டு நீங்கள் யோசிக்கலாம். விசயம் இல்லாமல் நான் எப்பயாவது தோம்பு இழுக்கிறானானே.. சொல்லுங்கோ பாப்பம். நீங்கள் எல்லாரும் அடிக்கடி ஊருக்குப் போய் வாறனியள் தானே. எப்பயாவது பின்தங்கிய கிராமங்களுக்குள்ள போய் எங்கட சனம் வாழுற வாழ்க்கையைப் பார்த்திருப்பீங்களோ..? பலர் உண்மையாகவும் சிலர் பொய்யாகவும் தலை ஆட்டலாம். ஆனால் பாருங்கோ, அங்க வானம் பார்த்த வீடுகளுக்குள்ளயும் இன்னும் சனம் வாழுது பாருங்கோ. அந்தக் கருமத்தையத்தெல்லாம் பார்க்க எங்கட ஆக்கள் பலருக்கு மனமில்லை.

ஏனெண்டால் நாங்கள் பையில வைச்சிருக்கிறதெல்லாம் எங்களுக்கு மட்டுமே எண்டுற மனோநிலைதான் எங்களை ஆட்டிப் படைக்குது பாருங்கோ. ஆனாலும் சிலபல நல்ல மனிதர்களும் இந்த உலகத்தில இருக்கினம் பாருங்கோ. அப்பிடியான

ஆக்கள் ஊருக்குப் போறநேரத்தில எங்கட சனத்தின்ர பின்தங்கிய வாழ்க்கையினைப் பார்த்துட்டு வந்து, அதுகளுக்கு எண்டொரு வாழ்க்கையை அமைச்சுக்கொடுக்க வேணும் எண்டு ஓடித்திரியினம். ஆனால் அவை ஓடித்திரிஞ்சு உழைக்கிறதையும் ஆட்டையைப் போட்டு அம்பாளிக்க ஊரில ஒரு கூட்டம் இருக்குது பாருங்கோ. அதைத்தான் ஓடாமல் உழைக்கிறது எண்டு சூசகமாச் சொன்னான் பாருங்கோ.

விசயம் என்னெண்டாப் பாருங்கோ, உங்களை மாதிரி கொஞ்சக் காலத்துக்கு முதல் விடுமுறைக்கு ஊருக்குப் போன ஒருத்தர் அப்பிடியே பின்தங்கிய கிராமங்களுக்கும் போயிருக்கிறார். அந்த நேரம் பாத்து அங்க சரியான மழை வேற பாருங்கோ. அந்த மழைக்குள்ள நல்ல வீடுகளில இருக்கிற ஆட்களே மிகுந்த பிரச்சனைகளை எதிர்நோக்குவினம். அப்பிடி எண்டால், ஓலைக் குடுசைகளில, வயல் நிலங்களுக்கு அருகாமையில இருக்கிற ஆக்களின்ர நிலைமையை யோசிச்சுப் பாருங்கோ.

அதை நேரடியாய் பார்த்த அவருக்கு மிகுந்த வேதனையாய்ப் போட்டுது. விடுமுறை முடிஞ்சு ஊருக்குத் திரும்பி வந்த அவர், உடனடியாகவே மக்களுக்கான பணியை முடிஞ்சவரை செய்வம் எண்டு யோசிச்சிட்டு ஒரு தொண்டு நிறுவனத்தை ஆரம்பிச்சிருக்கிறார். உங்கின நடக்கிற கொண்டாட்டங்களில் உணவு பரிமாறும் சேவை ஒன்றை ஆரம்பிச்சு, நண்பர்களோட அதைச் செய்து, அதில வாற ஊதியத்தை ஊரில உள்ள மக்களுக்கான நலத்திட்டங்களுக்காகக் அனுப்புறத்துக்கு ஒழுங்கமைச்சிருக்கிறார்.

அதுக்காக ஊரில இருந்த சிலரூடாக அங்க இருக்கிற இளைஞர்கள் சிலரை ஒழுங்குபடுத்தி, வறுமை நிலையில




**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**

இருக்கிற மக்களை இனங்கண்டு அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை அனுப்பி வேலைத்திட்டங்களை ஆரம்பிச்சு நடத்தியிருக்கிறார். அப்பிடியே நல்லவிதமாக வேலைகள் நடந்து கொண்டிருக்கேக்க வருடாவருடம் கணக்கு வழக்குகளைச் சரிபார்க்கிறது வழமை தானே பாருங்கோ. அப்பிடி பார்த்துக் கொண்டு வரேக்க, இறுதி வருடம் உதவிகளுக்காக அனுப்பப்பட்ட நிதியை அளவீட்டைச் சோதிக்கவேணும் எண்டு யோசிச்சிருக்கிறார்.

இதுவரைக்கும் அவர் உதவி செய்த குடும்பங்களின்ர தொடர்புகளைப் பெற்றுக்கொண்டு, அவர்களூடாக தகல்வல்களைப் பெற்று, கணக்கு வழக்குகளைச் சரிபார்த்தால், ஆளுக்கு நெத்தி சுருங்க வெளிக்கிட்டுட்டுது கண்டியளோ. ஏனெண்டால், சில குடும்பங்கள் தந்த தகவலுக்கும், குடும்பங்களின்ர பெயரிலே அங்க இருந்து எழுதி அனுப்பினவரின்ர கணக்குக்கும் பெரிய வேறுபாடு இருந்திருக்கு பாருங்கோ. இதென்னடா கோதாரி எண்டு ஆளுக்கு தலையிடி தொடங்கீட்டுது.

ஏனெண்டால் இஞ்ச இருந்து அனுப்புற பணத்துக்கு இவர் மட்டும் பொறுப்பானவர் இல்லை. அதுக்குள்ள பலபேரின்ர உழைப்பு இருக்குது. பலபேருக்கு பதில் சொல்லவேண்டிய கடமையும் இவருக்குக்குத்தான் இருக்குது. சரியெண்டு, அங்க இருந்து கணக்கு எழுதி அனுப்பினவருக்கு தொடர்பு எடுத்துக்கேட்டால், அவரோ தான் அனுப்பின கணக்கு நேர்மையான கணக்கு எண்டு விடாப்பிடியா நிக்குறாராம் பாருங்கோ. குறிப்பாக ஒரு கழிப்பறை அமைக்க ஒருநாளைக்கான

கட்டுமாநரின்ர கூலி இப்ப 2200 ரூபாக்கு அதிகமாக அங்க இல்லை. ஆனால் இவர் எழுதி யனுப்பின கணக்கில 4500 ரூபா போட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் தொடக்கம் மட்டக் களப்பு வரைக்கும் யாரும் இவ்வளவு கூலி பெறுவதில்லை பாருங்கோ. ஒரு இடத்தில ஒரு பசுமாடு வாங்கிக்கொடுத்ததற்கு 75,000 ரூபா போட்டு கணக்கு விட்டிருக்கிறார். ஆனால் ஒருவழியா மாடு வாங்கினவரின்ர தொடர்பை எடுத்துக் கேட்டால் அவருக்கு குடுத்த பணம் 55000 ரூபா கண்டியளோ. சரி எங்கயாவது ஒரு இடத்தில தவறு நடந்திருக்கலாம் எண்டு பணிவாக இஞ்ச இருந்து பணம் அனுப்பியவர் கேட்டாலும், கணக்கு விட்ட தம்பியோ இறங்கி வாரமாதிரி இல்லை.

இவருமோ திருப்பி திருப்பி கேட்டுப்பார்த்து கணக்கு விட்ட தம்பி ஒத்துவராத நிலையில, வேற வழியில்லாமல் சரி, தம்பி இவ்வளவு நாளும் நீங்கள் ஒத்துழைப்புத் தந்தத்துக்கு நன்றி, இனி நாங்கள் சேர்ந்து பயணிக்கிறது இயலாத காரியம். அதனால நீங்கள் செய்த வேலையின்ர தொடர்ச்சியை வேற ஒரு ஆளுக்குக் குடுக்கப்போறம். அதனால உங்களிட்ட இருக்குற ஆவணங்களை நீங்கள் குறித்த இடத்தில குடுத்துவிடுங்கோ எண்டு இஞ்ச இருந்து தகவல் போயிருக்கு. அப்ப தான் கணக்குவிட்ட தம்பி சும்மா சிலிர்த்து எழும்பி இருக்கிறார்.

“நான் இல்லாமல் நீங்கள் வேலை செய்யுறதை பாப்பம், என்னோட சேர்ந்து இஞ்ச இயங்கின யாரையும் நீங்கள் பயன்படுத்தமுடியாது” எண்டு கொஞ்சம் தொனியைக் கூட்டிக் கதைக்க நம்மட ஆளுக்கு தலை சுத்த வெளிக்கிட்டுட்டுது. சுத்தும்தானே பாருங்கோ. இஞ்ச உடலை வருத்தி




இவையள் சேர்த்து அனுப்புற பணத்தை அவர் அங்க சேவையாச் செய்யுறன் எண்ட பெயரில சுத்துமாத்து விட்டால் எப்பிடி இருக்கும் எண்டு யோசியுங்கோவன். அதுகும் இல்லாமல் அவருக்கு சம்பளம் வேற கொடுபட்டிருக்கு. அதனால அவர் கோபப்பட வேண்டிய தேவையும் அவருக்கு இல்லை.

ஆனால் கணக்கு விட்ட தம்பி பொங்கினதோ வேற மாதிரிப் பாருங்கோ... தன்னுடைய பெயருக்கு பங்கம் விளைவிச்சுப் போட்டாரெண்டு ஒரு வழக்குப் பதிவுசெய்யப்போறன் எண்டு ஓடித்திரிஞ்சு குறுஞ்செய்தி அனுப்பி வெருட்டிச்சுதாம். பிறகு தனக்கு உடனடியாக ஐந்து இலட்சம் தந்தால் நான் வழக்கை மீளப்பெறுவன் எண்டு சொல்லிச்சுதாம். அடேய் பிணந்தின்னி, வழக்குப் போட்டு உன்ர பெயரைக் கெடுத்ததே நீ தானே..? பிறகு ஏன் உனக்கு நட்ட ஈடு? நீதான் உண்மையில இஞ்ச உள்ள ஆக்களுக்கு நட்ட ஈடு குடுக்கவேணும்..?

தாயக மக்களுக்காக இயங்குற அந்த அமைப்பிலே நீ வேலை செய்யததுக்கு சம்பளம் வாங்கி இருக்கிறாய். அப்ப நீ செய்தது சேவையும் இல்லை. பிறகேன் பொங்குறாய். செய்தது நாதரித்தனம், இதில நாசூக்கா நளினம் வேறயோ? அடேய், எங்கட சனத்தை அழிக்க வேற்றினத்தான் தேவை யில்லை. உங்களை மாதிரி ஆட்களே போதும்.

நீ உங்க பொது வெளியில நல்லவன் மாதிரி நாடகம் போட்டு நடிச்சது தெரிஞ்சாலும் எல்லாரும் அமைதியா இருந்ததுக்கான காரணம் என்னவெண்டால், சரி ஏதோ தெரிஞ்சோ தெரியாமலோ ஒரு தப்பு நடந்துபோச்சு, அதை அப்பிடியே விடுவம் எண்டு அவர்கள் விட்டதால தான். ஆனால் நீ உன்னை நல்லவனாகக் காட்ட, முந்திரிக்கொட்டை மாதிரி ஓடியோடி இல்லாதது பொல்லாதது எல்லாத்தையும் எழுதினாய் தானே. இனி உன்னை யாரும் விடுறதாய் இல்லை.

அடேய் பிணந்தின்னி, உனக்கு அஞ்சு பத்து அதிகமாக வேணும் எண்டால் கேளடா எண்டு இஞ்ச இருத்தவங்கள் அடிக்கடி கேட்டவங்களல்லே..? அப்பயெல்லாம் ஐயோ எங்கட சனத்துக்கு நீங்கள் செய்யுறதே பெரிய விசயம், எனக்கு நீங்கள் தாற சம்பளமே போதும் எண்டு நல்ல நாடகம் போட்டுட்டு, இப்ப குய்யோ முறையோ எண்டால் உது ஆரின்ர பிழை..? அடேய் இஞ்ச இருந்து அவர்கள் அனுப்புற காசு சும்மா வந்ததில்லை.

திருமணம், பிறந்தநாள் எண்டு போய் கால்கடுக்க நிண்டு, சாப்பாடு பரிமாறி, சாப்பிட்ட தட்டு எல்லாம் கழுகி, நிலம் துடைச்சு, குப்பை அள்ளி தங்கட விடுமுறை நாளிலையும் ஓய்வாய் இருக்காமல் நாட்டில இருக்கிற ஒரு சில சனத்துக்காக தங்களை வருத்துற ஒரு சில நல்ல உள்ளங்களின்ர உழைப்படா..! அவங்களின்ர சேவையில் மண் அள்ளிப்போட்டதும் இல்லாமல், ஊரில இருக்குற எங்கட சனத்துக்கு கிடைக்கிற உதவியிலையும் மண் அள்ளிப்போட நினைக்கிற உன்னையெல்லாம் மனிசப் பிறவியிலையே சேர்க்க ஏலாது. உப்பிடியே துலைஞ்சு போ.

**உலகத்தில் திருடர்கள் சரிபாதி**

**ஊமைகள் குருடர்கள் அதில் பாதி**

**கலகத்தில் பிறப்பது தான் நீதி**

**மனம் கலங்காதே மதி மயங்காதே**

**என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே..?**

**- அப்ப வரட்டே**

# அந்த நாள் ஞாபகம்!

## அவனா? இவன்!



போதி மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தனாக மருத்துவமனையை விட்டு அவனது பயணம் மீண்டும் பள்ளிக் கூட வகுப்பறையில்; தொடர்ந்தது. அது ஒரு கலவன் பாடசாலை 9ம், 10ம் வகுப்புகள் என்றாலே, பருவம் அடைந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையும், பேச்சும், பகடி கலகலப்பும் பஞ்சமின்றி வகுப்பறையிலிருந்து, வீட்டுப் படலை வரை திருவிழாக் கோல மகிழ்ச்சி கூத்தாடும்.

இதிலே 2ம் உலகப் போரில் சிங்கப்பூர் - மலேசிய நாடுகளில் வாழ்ந்த நம் மக்கள் தமது பிள்ளைகளைப் பாதுகாப்புக் கருதி, தமது உறவினருடன் வாழ வைக்கும் கலாச்சாரம் படிப்படியாக அதிகரித்தது. அதனால் புது வரவுகளாகப் பருவம் அடைந்த பெண்களும், ஆண்களும்



கிராமத்துப் பாடசாலைகளிலிருந்து, நகரத்து அதுவும் மேலை நாட்டு நவீன நாகரீகம், அன்றாட வாழ்வுடன் இணைந்த ஒரு புதிய பண்பாட்டை எமது மண் பிரசவித்த அதிசயம் நிகழ்ந்தது.

1950 வரை எமது மண்ணில் பெண்கள் பருவம் அடைந்து விட்டால், பள்ளிப் படிப்பும் நிறுத்தப்பட்டு விடும். அத்தோடு அடுத்த வீட்டுப் பையனாலும் அவளைப் பார்த்துப் பேசிவிட முடியாது. அண்ணன், தம்பி கூட அவளை தொட்டுப் பேசவும் முடியாது. சித்தாடை எனப்படும் சிறிய சேலையால், நிலத்தைத் தொடும் உடையால் அவளின் கணைக் காலைக் கூட மற்றவர் காணமுடியாது. அப்படியான உடையும், கிடுகு வேலி மறைப்பும் பெண்ணை ஒரு மர்மப் பொருளாக மறைத்து வைத்திருந்தது யாழ் மண்ணின் பண்பாடு.

அரசின் இலவசக் கல்வித் திட்டமும், அரசாங்க உத்தி யோக மாப்பிள்ளை மருமகனாக்கும் ஆசையும், பெண்களைப் பெற்றவர்களை பெண்கள் கல்விக்கானத் தடைகளை உடைத்து, ஆண்கள் பள்ளிகளில் பருவமடைந்த பெண்களை சேரவைத்தன. நிலத்தோடு உறவாடிய பாவாடைகள், மெள்ள மெள்ள மேலே எறி, முழங்கால்களை எப்போ கடந்து மேலே போகலாம் எனப் போராடிய காலத்தில், சிங்கப்பூர் புது வரவுகளின் கவர்ச்சி உடைகள், புது நாகரீகத்தைப் புகுத்தியது. பாவாடை சீராடைகளாக மாறி, அவையும் முழங்கால்களை வெறுத்து 'மிடி' என்கிற புதுப்பிறவி எடுத்தன.

மேல் சட்டைக்குள் புதுப் புது சமாச்சாரங்கள், புதிய பரிமானங்களுடன் கவர்ச்சி விருந்துகளைப் படைக்கத் தொடங்கின. லைலா மஜ்னு, ரோமியோ ஜுலியட், தேவதாஸ் பார்வதி போன்ற காதல் படங்கள் பல கதாநாயகர்களையும்,

கதா நாயகிகளையும் தோற்றுவிக்கச் சிங்கப்பூர் வரவுகள் உருவாக்கின. இதிலே முதல் சோடி சிங்கப்பூர் வரவுகள். பையன் கல்லூரி அதிபரின் மருமகன். 1946 காலப் பகுதியில் போரில் தப்பி வந்தவன். படிப்பில் தொடக்கம் முதல் படு சுட்டி, அழகிலும் மிகப் பெரும் ஆணழகன். நல்ல ஒழுக்கம் நிறைந்து, அனைவரது பாராட்டுக்கும் உரியவன்.

ஆனால், அக்காலத்தில் காதல் என்றால், சமுதாயம் காவாலித் தனமாக இரவோடு இரவாக ஓடிப்போகும் விடையமாகப் பார்க்கப்பட்ட காலம் அது. சாதியில் பேதம் இல்லை, ஆனாலும் கதாநாயகியைப் பெற்றோர் சிங்கப்பூருக்கே எடுத்து விட்டனர். பையனும் சிங்கப்பூரில் இருந்து வந்தவன் என்ற படியால் அவனும், அங்கே போய் மணம் முடித்து விட்டதாக தெரிகிறது. அந்தக் காதலைத் தொடர்ந்து பல காதலர்களை, அவன் படித்த கல்லூரி உருவாக்கி, இப்பொழுதெல்லாம் காதல் என்பது கடைச்சரக்காக காசு, பணம், பதவி, சாதி பார்த்து வரும் சமாச்சாரமாகி விட்டது.

புயல், காற்று, மழை போல வருவதும் தெரியாது. பெரிய சேதங்களை ஏற்படுத்தி விட்டுப் போவதும் தெரியாமல், பிள்ளை குட்டிகளைப் பெத்துப் போட்டு போய் விடுகிறது. யாருக்கும் பொறுப்போ, பொறுமையோ கிடையாது. வயதுக்கு ஏற்றபடி வாழத் தெரியாமல், தங்களது வாழ்க்கையும், தாம் பெற்ற பிள்ளைகளின் வாழ்க்கையையும் தொலைத்து விட்டுத் தொலைக் காட்சித் தொடர்களில் தொலைந்து போகும் இனமாக எம் இனம் அழிந்து போகிறது.

**[அவன் வருவான்]**



# ஆடி அமாவாசையும், காத்தோட்டிக் காயும்!



காத்தோட்டிக்காய்! எம்மவர்களில் இன்றைய தலைமுறையில் ஏராளமானவர்களுக்கு (ஏன் முந்திய தலைமுறையினரிலும் பலருக்கு) இந்த மரத்தைப் பற்றியோ, இதன் வரலாறு பற்றியோ எதுவும் தெரியாது!. காடுகளில் இயற்கையாக வளரும் இந்த மரத்தை கிராமப்புறங்களில் ஐயனார், கீரன் போன்ற சில ஆலயங்களைச் சுற்றி வளர்த்து, ஸ்தல விருட்சமாக அவ்வூர் மக்கள் கொண்டாடி வருகின்றார்கள்.

இதன் வேர், பட்டை போன்றவைகள் மருந்துத் தேவைகளுக்காக சித்த வைத்தியர்களால் பாவிக்கப்படுகின்றது. இந்து சமய மக்கள் அமாவாசை தினத்தன்று, பக்குவம் செய்யப்பட்ட இதன் காயை கட்டாயமாக உண்ண வேண்டும் என்று ஒரு விதி உண்டு!.

இந்த முறை கொஞ்சம் கொஞ்சமாக மருவி, இப்பொழுது ஆடி அமாவாசை தினத்தில் மட்டும் தந்தையின் ஆத்ம சாந்திக்காக, விரதமிருப்பவர்கள் சமைக்கின்றார்கள் (சாப்பிடுகின்றார்களோ தெரியாது!) இப்பொழுது நாங்கள் இந்தக் காத்தோட்டியின் மருத்துவ குணங்களைப் பார்ப்போம்.

ஆனி, ஆடி மாதங்களான முதுவேனிற் காலத்தில் அதிக வெப்பம் காரணமாக, வாதம் சம்மந்தமான நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு! அக்காலங்களில் நீர் வடிவமான உணவுகள் உடலுக்கு நல்லது. தொடர்ந்து ஆவணி மாதம் பிறந்ததும் மழைக்காலம் ஆரம்பிப்பதால் அச்சூழலில் ஏற்படும் மாறுதல்களுக்கமைய நமது உடம்பையும் தயார் படுத்த வேண்டும்! குறிப்பாக வயிற்றுப் பூச்சிகளை கொல்வதற்கு, பேதி குடிப்பது போன்ற சிகிச்சைகளை செய்வார்கள்.

இயற்கையின் கருணையால், அந்தத்தக் காலத்திற்கு நமது உடம்பிற்கு என்ன மாதிரியான உணவு வகைகள் நமக்குத் தேவையோ? அவைகள் அந்தத்தக்

காலங்களிலேயே விளைகின்றன.

உதாரணமாக ஆனி, ஆடி மாதங்களில் வெப்பம் தணிக்க குளிர் நிழலும், பொழிலிடமும், மெல்லிய பூங்காற்றும், பனி மலரும், நறுங்கனியும், தீஞ்சுவைத் தண்ணீரும், குளிர் இளநீரும், நொங்கும், பதநீரும், அருளுகின்றாள் இயற்கை அன்னை.

காத்தோட்டி செடி வகையைச் சேர்ந்தது. மரங்களின் மேல் தானாக வெகு தூரம் வரைக்கும் கொடியேறிப் படரும்!. பல பத்து வருடங்கள் வரை உயிர் வாழும்! ஏராளமான கிளைக் கொடிகளும் உண்டு. அதிகமான நுனிக் கொடிகள் கீழ் நோக்கிச் சரம் சரமாகத் தொங்கும்.

கொடியின் தண்டுப் பகுதியில், பெரிய பெரிய முட்கள் அதிகமாக இருக்கும். கொடியின் ஒவ்வொரு கணுவிலும் ஒரு இலையும், அதையொட்டி பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு முட்கள் உண்டு. இலையின் அடி, நுனி இரண்டும் கூர்மையாக இருக்கும். காம்பு மிகச் சிறியது.

தை மாதம் முதல், சித்திரை மாதம் வரை மொட்டுக்களும், பூக்களுமாக இருக்கும். பின்னர் பிஞ்சாகி, காயாகி விடும். இதன் காய் அதிக விதைகளைக் கொண்டிருக்கும். காயின் தசை மிருதுவானதும், மென்மையானதுமாக இருக்கும்.

காத்தோட்டிக் காயை கறியாக சமைத்தும், வற்றலாக்கி உணவுடன் சேர்த்தும்; சாப்பிட்டால் இருமல், ஆஸ்த்மா நோய்கள் குணமாகும்.

காத்தோட்டிக் கொடியின் வேரை எண்ணெயில் இட்டுக் காய்ச்சி, தலைக்கு வைத்து முழுகிவர மூக்கடைப்பு, தொண்டைக்கட்டு, மண்டைக் குடைச்சல் தீரும்.

இலைகளை நன்றாகக் கழுவி சுத்தம் செய்து, இள வென்னீரில் காய்ச்சி, குழந்தைகளுக்குப் பருக்கக் கொடுத்தால் அவர்களுக்கு ஏற்படும் மாந்தம், இருமல், வாந்தி முதலியன தீரும்.

காத்தோட்டி வேரைக் கழுவிச் சுத்தம் செய்து, வெய்யிலில் காய வைத்து, இடித்து, மாவாக்கி, சூரணம் செய்தும், அல்லது வேரைத் தண்ணீரில் விட்டு கொதிக்க வைத்து, நன்றாகச் சுண்டக் காய்ச்சி, கசாய முறையில் அருந்தினால், இரைப்பை சம்மந்தமான நோய்கள் தீரும்.

காத்தோட்டி இலைச் சாற்றை நல்லெண்ணை, அல்லது வேப்பெண்ணையுடன் சேர்த்துக் காய்ச்சி, சாறு சுண்டியதும் இறக்கி ஆறவிட்டு, மூட்டுக்களுக்கு ஏற்படும் நோய்களுக்குப் பூசினால் குணமாகும்.

காத்தோட்டிக் காயை அப்படியே வத்தலாக்குவதை விட, மோரில் ஊறப்போட்டு சற்று உலர்த்தி, மறுபடியும் மோரில் ஊறவைத்து, இப்படியாக மூன்று முறை செய்தபின் வற்றலாக்கிக் கொள்வது நல்லது.

காத்தோட்டிக்காய் வற்றலை நெய் அல்லது நல்லெண்ணையில் வறுத்து, இரவு சாப்பாட்டுடன் கலந்து சாப்பிடலாம். இதனால் ஆஸ்மா, மார்புச் சளி, குடற் புழுக்கள் ஆகியவன இல்லாது போகும்.

காத்தோட்டிக்காய் வற்றலோடு, நெல்லிக்காய் வற்றல், வெந்தயம், ஓமம், சுக்கு, சீரகம் காய்ந்த கறிவேப்பிலை ஆகியவற்றை ஒரே அளவு எடுத்து, சிறிதளவு நெய்யில் பொன் வறுவலாக வறுத்து, இடித்து, சூரணம் செய்து காலை, மாலை



**“இந்து சமய மக்கள் அமாவாசை தினத்தன்று, பக்குவம் செய்யப்பட்ட இதன் காயை கட்டாயமாக உண்ண வேண்டும் என்று ஒரு விதி உண்டு!.”**





இரு நேரமும் சிறிய உருண்டையளவு வாயில்; போட்டு, வென்நீர் குடித்துவர காசநோய், மார்புச் சளி, பசியின்மை தணியும்.

காத்தோட்டியினை ***(Botanical Name - Cappans Zeyianca Family - Cappan Daceae)*** ஆதண்டம் என்றும் சொல்வார்கள்.

மண்டைக் குடைச்சலுறும்வாதத்தின் பிணனம்போம்

**தொண்டைக் கபமுந் தொலையுங்காண் - மீண்டு செய்யும்**

**வாதக் கடுப்பகலுமாதே! ஆ தொண்டைக்குப்**

**போதப் பலபிணி போம்... போம்...**

இதனால் குடைச்சல், மண்டைக் குடைச்சல், தொண்டையில் சேரும் பளி முதலியன நீங்கும்.

**ஆதொண்டை யின்காய் அஃதுவற்ற லென்ன**

**வேதின வைப்பிணி யினமெலா மகலுமே**

ஆதொண்டைக் காயை வற்றலாக்கி, உணவுடன் சேர்த்து உண்ணில் கபநோய்க் கூட்டங்கள் யாவும் நீங்கும். இப்படியான மருத்துவ குணங்கள் நிறைந்த இந்த காத்தோட்டிக் காயில் இருக்கும் இன்னொரு விஷேச மருத்துவ குணம் என்னவென்றால்? உங்களுக்கு மேற்சொன்ன எந்தவிதமான வருத்தங்களும் இல்லாவிட்டால் கூட, இதனை கறியாகச் சமைத்து, உணவுடன் கலந்து சாப்பிட்டால் எதிர்காலத்தில் இப்படியான நோய்கள் வராமல் பாதுகாக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை உங்கள் உடம்பில் சேகரித்து வைத்துக் கொள்ளும்..

ஆனால் நம்மவர்களோ! இறந்தவர்களின் ஆவி நம்மில் தொற்றிக் கொள்ளாமல், பேய்களுக்கு படைக்கும் காயென நினைத்து, ஆடி அமாவாசை தினத்தன்று, இறந்தத் தகப்பனுக்கு படைக்கும் படையலில் இதையும் ஒரு ஓரமாக வைத்துவிட்டு, காகத்திற்கு படைக்கும் படையலோடு சேர்த்துப் படைத்து விடுகின்றார்கள். (கொட்டி விடுகின்றார்கள்)

இப்பொழுது ஐரோப்பிய நாடுகளிலும் ஆடி அமாவாசைக் காலங்களில் அனேகமாக எல்லாக் கடைகளிலுமே காத்தோட்டிக் காய் விற்பனைக்கு வந்து விடுகின்றது! அனேகமாக எல்லா வீடுகளிலும் ஆடி அமாவாசை விரதத்தில் அன்று வெறும் சம்பிரதாயத்திற்காகவே காத்தோட்டிக் காய் சமைக்கின்றார்கள்.!!!

சம்பிரதாயத்திற்காக விரதம் பிடிப்பவர்கள் மத்தியில், அதே சம்பிரதாயத்திற்காகவாவது இதைச் சமைக்கிறார்களே! என்று திருப்திப் பட்டுக் கொள்வோம்.



பராசு அகமது

# பிராமணக் கொலையின் மதிநுட்பம்

தமிழில் : இராமலட்சுமணன்

“இராசீவின் கொலை அதிகார மட்டத்திலும், அரசியல் மட்டத்திலும் உள்ளிருந்தவர்களால் நிகழ்த்தப்பட்டது” என்கிற மிக முக்கியமான நூலை பராசு அகமது என்கிற பத்திரிகையாளர் எழுதி இருக்கிறார். இவர் ***Indian Express, The pioneer, Deccan cronical, The Asian Age*** மற்றும் ***Tribune*** போன்ற முன்னணி ஊடகங்களில் அரசியல் மற்றும் புலனாய்வு பிரிவுகளில் பணியாற்றியவர். இதுவரை இராசீவ் காந்தி கொலை குறித்து வந்த நூல்கள் யாவும் ஒன்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு குறித்தோ, அல்லது ***SIT*** கார்த்திகேயன், ரகோத்தமன் போன்றவர்கள் தங்களின் புலனாய்வு குறித்தோ எழுதப்பட்டவை.

ஆனால், இந்த நூல்தான் முதன்முறையாக புலனாய்வு, குற்றச்சாட்டப் பட்டவர்களின் வாதம் தாண்டி, அனைத்திற்கும் மேலாக அதன் பின்னே இருக்கும் ‘அரசியல்’ குறித்து தெளிவாக விவரிக்கிறது.

இந்த நூலில் அவர் ‘இப்படி’ துவங்கி ‘இப்படியே’ முடிக்கிறார். அதாவது, எந்த ஒரு காவல் அமைப்பும், புலனாய்வு நிறுவனமும் அதிமுக்கிய கொலைகளை விசாரிக்கும் போது, கொலைக்கு பின்னே இருக்கும் கொலையாளிகளின் நோக்கம், கொலை செய்ய ஏற்படும் தூண்டுணர்வு ***(motivation),*** கொலையால் கிடைக்ககூடிய ஆதாயம். இவற்றை ஆராயாமல் எந்த ஒரு குற்ற விசாரணையையும் நிகழ்த்த முடியாது, துப்பு துலக்குவதில் வெற்றியும் கிட்டாது என்கிறார்.

இராசீவின் கொலையை அந்த நோக்கில் ஆராயும்போது, ஆதாயமடைந்தவர்கள் யாராக இருக்கிறார்கள்? என்பதை இராசீவுக்கு பிந்தைய கடந்த இரு தசாப்தங்களின் அரசியல் போக்கில் பார்க்க முடிகிறது. இராசீவ் இறக்கும் முன்னர் பாராளுமன்றத்திற்கு உள்ளேயே நுழைய முடியாமல் இருந்த ஒரு கும்பல் இன்று பாராளுமன்ற அரசியலை மட்டுமின்றி, அரச நிறுவனங்கள் அனைத்தையும் ஆட்சி செய்கிறது.

கொலையோடு நேரடியாக சம்பந்தப்பட்ட அல்லது ஜெயின் மற்றும் வர்மா ஆணையத்தால் சந்தேக நிழல் படிந்த நரசிம்மராவ் துவங்கி சந்திராசாமி, சுப்பிரமணிய சாமி, டி.என்.சேஷன், நாராயணன், மார்கரெட் ஆல்வா, மரகதம் சந்திரசேகர் உள்ளிட்ட தலைவர்களும் விசாரணையை திட்டமிட்டு குழப்பி, திசை திருப்பிய அதிகாரிகள் எண்ணற்றோர் தங்கள் திறமையின் உச்சத்திற்கு செல்கிறார்கள்.

குறிப்பாக சிறப்பு புலனாய்வு பிரிவு ***(SIT)*** கார்த்திகேயன், ராகவன் பிற்காலத்தில் ***CBI*** தலைவராகிறார். இவர்தான் பின்னர் குசராத் படுகொலைகளில் மோடிக்கு ‘புனிதர்’ பட்டம் வழங்கி மேல்நீதிமன்றிற்கு அறிக்கை அளித்தவர். அந்த ராகவன் தற்போது சைப்ரசுக்கான இந்தியாவின் தூதுவர். மற்றொரு அதிகாரி ***Radhavinod Raju*** பின்னர் ***NIA*** வின் தலைவரானார்.

***MK*** நாராயணன் ***NSA*** தலைவராகி, பிரதமரின் சிறப்பு ஆலோசகராகி, பின்னர் வங்காள ஆளுநர் ஆனார். இராசீவ் கொலை விசாரணையில் தொடர்புடையவர்கள் அனைவரும் தத்தமது வாழ்வின் உச்சத்தை தொட்டது கொலையின் சூத்திரதாரிகளை காப்பாற்றியதற்காக கிட்டிய பரிசா? அதேவேளை, புலிகளுக்கு இராசீவின் இறப்பால் ஏற்பட்ட ஆதாயம் என்று ஏதுமில்லை, மாறாக பெரும் இழப்பே மிச்சம்.

ஏனெனில், சோதனைக் காலங்களில் புலிகளின் பதுங்கு அரண் தமிழ் நாடு. புலிகளின்

‘இதயத்துடிப்பு’ தமிழர்களின் புலிப்பற்று. இராசீவ் கொலையால் அது முற்றிலும் நின்று விட்டது. தமிழ்நாடு தொடர்பறுந்தால், இன்றல்லா விட்டாலும், என்றாவது ஒருநாள் எதிரிகளிடம் இலகுவாக முழு இலக்காக ஆகிவிடுவோம் என்பதை ஊகிக்கத் தெரியாத இயக்கமல்ல புலிகள் இயக்கம்.

அமைதிப்படையை அனுப்பி தமிழர்களை கொன்றதற்கு பழிக்கு பழியாக, இராசீவை கொன்றார்கள் என்ற இந்திய அதிகார வர்க்கத்தின் சொத்தை வாதத்தை ஆய்வு செய்தால், ஒரு தேசத்தை கட்டி எழுப்ப பெரும் கனவுடன் முப்படை கட்டி வீரச் சமர் புரியும் ஒரு விடுதலை இயக்கமானது, ஊழலில் சிக்கி பல்லு புடுங்கப்பட்டு, ஆட்சியை இழந்து, மண்டல ஆணையத்தால் விபி சிங்கிடம் தன் வசீகரத்தையும் இழந்த ஒரு தனி நபர் இராசீவின் பின்னால் அவரின் உயிருக்கு குறி வைத்து, படை அனுப்பி, கொலை செய்ய காத்திருக்கும் சிறுபிள்ளை விளையாட்டை செய்யும் என்பதை உலக அரசியல் தெரிந்த எவரும் நம்ப மாட்டார்.

(ராஜா வீட்டு கன்றுக்குட்டி இராசீவுக்கு தவறான ஆலோசனை வழங்கி, அமைதிப் படையை வைத்து புலிகளை அழிக்க ஒரு ‘வர்க்கம்’ முயல்வதை, அமைதிப்படையே பிரபாகரனிடம் விளக்கி இருக்கிறது).

**SIT**-கார்த்திகேயன் தரப்பு மற்றும் சுப்பிரமணிய சாமி தரப்பு உளவு மற்றும் ஊடகங்கள் மூலம் பரப்புவது போல இராசீவ் மீண்டும் ஆட்சிக்கு வந்து அமைதிப்படை அனுப்புவார் என்று புலிகள் பயந்தார்கள் என்பதும் பொருளற்ற வாதம்.

ஏனெனில் இராசீவ் செல்வாக்கு அதள பாதாளத்தில் இருந்தது. அவர் வெற்றி வாய்ப்பே யில்லை. இராசீவ் இறந்த பின்னரும், அந்த அனுதாப அலையிலும் கூட அத்தேர்தலில் காங்கிரஸ் தனிப்பெரும்பான்மை பெற முடியவில்லை. 244 தொகுதிகளில் மட்டுமே வென்றது, 28 தொகுதிகள் பெரும்பான்மைக்குக் குறைவு. (இந்திரா இறந்து ஏற்பட்ட அனுதாப அலையில் 410 இடங்களை காங்கிரஸ் வென்றது நினைவில் இருக்கலாம்)

மேலாக, இறையாண்மை கொண்ட இலங்கைக்கு தனது விருப்பத்திற்கு ஏற்றாற் போல இந்தியா அமைதிப்படை அனுப்ப முடியாது. இராசீவ் - செயவர்த்தனே ஒப்பந்தம் காலாவதியாகி, இராசீவின் பரம வைரியும், அமைதிப் படையை இலங்கை மண்ணில் இருந்து வெளியேற்றுவேன் என்று தேர்தல் வாக்குறுதி அளித்த பிரேமதாசா அப்போது அதிபராகி இருந்தார். பிரேமதாசா இந்தியப்படையை எதிர்க்க புலிகளுக்கு ஆயுதம் வழங்கியவர்.

இப்படியாக, புலிகளின் நட்பு சக்தியாக இருந்த விபிசிங்- ஜார்ஜ் பெர்னாண்டஸ்சின் ஜனதா தளம் மீண்டும் ஆட்சிக்கு வர இருந்த வாய்ப்பையும் கெடுத்தது இராசீவ் கொலை. ஆகவே எல்லா கணக்குப்படியும் மோசமான முடிவைத் தரும் வேலையை புலிகள் செய்யமாட்டார்கள்.

இன்று பிராமணாள் கூட்டம் புலம்புவதைப் போல, ஒருவேளை, ஆயுதம் வாங்க பணத்திற்காக புலிகள் அந்த இராசீவ் கொலைக்கான சர்வதேச திட்டத்தை எடுத்திருந்தாலும் அந்த ஒப்பந்தத்தை வழங்கியவர்களை சுப்பிரமணிய சாமி, சந்திராசாமி, நரசிம்மராவ் போன்றோர் மறைப்பதேன்?

ஒருவேளை, மொசாத்திற்காகவோ, விற்காகவோ அந்த ஒப்பந்தவேலையை புலிகள் செய்திருந்தாலும் மொசாத்தோ, **CIA** வோ புலிகளை அந்த கொலைப்பழியில் இருந்து பாதுகாத்து இருக்காதா? ஆக, விபிசிங்கின் மண்டல் ஆணைய எழுச்சியால் கிளர்ந்தெழுந்த ‘தலைமை’ நோக்கிய புதிய பாய்ச்சலை வீழ்த்தவும், இந்தியத்திற்கு நிரந்தர பிராமண சாயம் பூசவும், இந்திய அரசியலை காந்திய அணி சேரா, மதசார்பற்ற அரசியல் தத்துவத்தில் இருந்து மாற்று தத்துவத்திற்கு மாற்றவும், முதலாளிகளோடு கூட்டு சேர்ந்து தேசத்தை அவர்களுக்கு விற்று, கைமாறாக அவர்கள் துணையோடு பிராமணியத்தை நிலைநிறுத்தவும், புலிகளை தமிழர்களிடமிருந்து அந்நியப்படுத்தி, தமிழர்கள் இந்திய துணைக் கண்டத்தில் தேசம் அமைத்துவிடாது தடுத்து ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தியது இந்தியா என்று சொல்லப்படும் **Brahminical Establishment** (பிராமணியத் திட்டம்) என்கிறார் ஆசிரியர்.

கொலையில், கொலை விசாரணையில் இருந்த சுவாரசியமான மர்ம முடிச்சுக்கள் குறித்து விவாதிக்கும் போது இராசீவின் பயணத்திட்டத்தில் சிறிபெரும்புதூர் பலவந்தமாக மரகதம் சந்திரசேகர் - மார்கரெட் ஆல்வா காம்போவால் திணிக்கப் பட்டது. பிற்காலத்தில் காங்கிரஸ் சந்திராசாமியின் தொடர்பை முற்றிலுமாக துண்டித்த போதும், மார்கரெட் ஆல்வா மட்டும் இராசீவ் கொலையின் சூத்திரதாரி சந்திரசாமியின் வீட்டு வைபோவங்களில் முன்னின்று நடத்தினார்.

மரகதம் சந்திரசேகரின் மருமகள் ஒரு சிங்களத்தி என்பதை பிராமண ஊடகங்களும், **SIT** கார்த்திகேயனும் திட்டமிட்டு அலட்சியப்படுத்தி மறைத்தது. மரகதம் சந்திரசேகரின் மகளின் தோழி லதா கண்ணன் மற்றும் தாணு, சிவராசன் நட்பு. சிவராசன் அக்காலத்திலேயே மரகதத்துக்கு ஐந்து லட்சம் நன்கொடை வழங்கியது.

இராசீவோடு இறந்து போன லதா கண்ணனின் கணவர் அதன் பின்னர் இரவோடு இரவாக பெரும் செல்வந்தர் ஆனது. மரகதம்தான்

நரசிம்மராவை முதன்முதலாக ஆந்திராவின் முதல்வராக தேர்ந்தெடுத்தவர்.

ராவுக்கு அரசியல் வாழ்வு கொடுத்த மரகதத்தின் அந்த நட்பு சந்திராசாமியின் வாசல் வரை இழுத்து சென்றதும் கொலைக்கு முன்னர் சிவராசன் சவுதிக்கு பயணம் செய்து, சந்திராசாமியின் தொழிற்கூட்டாளியும் ஆயுத பேர மன்னனுமான அட்னன் கஷோகியை ஏன் சந்திக்கிறார்? **SIT** கார்த்திக்கேயனின் அறிக்கைப் படியே பார்த்தாலும் திட்டம் தமிழ்நாட்டில் இருந்த எந்த **LTTE** உறுப்பினர்களுக்கும் தெரியாமல் இருந்ததும், இராசீவின் கொலைக்கு மறுதினம் பத்திரிகைகள் மூலம் சிவராசன் படத்தை பார்த்து மற்ற புலிகள் தெரிந்து கொள்ள நேரிட்டதும் ஏன்?

கொலையை படம் பிடிக்க சிவராசன் ஹரிபாபுவை ஏன் நியமித்தார்? புகைப்படக் கருவியை எடுத்து செல்ல தகுந்த நேரமும் வாய்ப்பும் இருந்தும் அதை ஏன் அங்கேயே விட்டு செல்கிறார்?

ஒலிப்பதிவுநாடாவில் கொலைக்கு சற்று முன்னதான முக்கியமான நிகழ்வுகளை **SIT** கார்த்திகேயன் அழிக்க காரணம் என்ன? அதை ஜெயின், வர்மா ஆணையங்களிடம் ஒப்படைக்காமல் எம்கே நாராயணன் ஏன் இப்போதும் மறைக்கிறார்?

தீவிர தேடுதல் துவங்கியதும் எண்ணற்ற புலிகள் ஈழம் நோக்கி பயணிக்க, ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலரும் அழைத்தும் சிவராசன் ஈழம் செல்ல ‘பயந்து’ மறுத்தது. பத்மநாபாவை அழித்தொழித்து விட்டு அடுத்த சில மணித் துளிகளில் ஈழம் அடைந்திருக்க, சிவராசன் ஏன் இந்தியம் விழித்துக்கொள்ள முன் அன்றிரவே படகு ஏறவில்லை? மாறாக, கனகசபாபதியை அழைத்து சந்திராசாமியின் வீட்டுக்கு அருகே தெற்கு டெல்லியில் தங்க ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்கிறார்.

இடையே, பெங்களூரில் சிக்கி மற்றவர்கள் சையனைடை விழுங்கி மரணிக்க, சிவராசன் மட்டும் குண்டடி பட்டு இறக்கிறார். திட்டத்துக்கு ஆளெடுத்த அதிகார வர்க்கம் காப்பாற்றும் என்று நம்பியிருந்தது அவர்களால் கொலை செய்யப்பட்டாரா?

பெங்களூரில் சிவராசனுக்கு வீடு வழங்கிய ரெங்கநாத், சிவராசன்- சந்திராசாமி நெருக்கம் குறித்து ஆங்கில நாளேடுகளில் பேட்டி வழங்கியதும், சிபிஐ **SIT** தலைவர் கார்த்திகேயன் வெளியே சொல்லாதே என ரெங்கநாத்தை மிரட்டியது.

ரெங்கநாத் தனது அவுட்லுக் பேட்டியில் மார்கரெட் ஆல்வா தனக்கு முன்பே இராசீவின் பயண அட்டவணையை வழங்கியது பேருதவியாக இருந்தது என சிவராசன் சொன்னதாக கூறுகிறார். டெலோவில் இருந்து புலிகள் அமைப்புக்கு மாறிய சிவராசன் இரட்டை முகவரா?

அப்போதைய **IB** தலைவர் **MK** நாராயணன்



ஏன் இராசீவ் இறப்பதற்கு முதல்நாள் அரசு விடுமுறையன்று கூடுதல் பாதுகாப்பு கேட்டு கடிதம் எழுதுகிறார். பிராமணத் தளபதியாக தன்னை தானே அறிவித்துக் கொண்ட டி.என்.சேசன் எப்படி இராசீவ் இறந்து விடுவார் என்று தேர்தலுக்கு முன்பே கணித்து, அதை சுப்பிரமணிய சாமியிடம் தெரிவித்து, தேர்தலை முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு மூன்று மாதங்களுக்கு பிரித்து நடத்துகிறார்?

(சோனியா) காந்தி குடும்பம் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வண்ணம், தங்கள் சொந்த கட்சி பிரதமரின் இரங்கலை தவிர்க்க காரணம் சந்திரா சாமி- சுப்பிரமணிய சாமி- நரசிம்மராவ் கூட்டணி கொலைக்கு காரணம் என்பதாலா? வர்மா, ஜெயின், சிபிஐ - ***SIT*** ஆகிய மூன்று விசாரணை குழுக்களையுமே அமைத்தது கொலை குற்றம் சாட்டப்பட்ட சுப்பிரமணிய சாமிதான் (அப்போதைய சட்ட அமைச்சர்) என்பது வேடிக்கை அல்லவா.

இதில் மற்ற இருவரும் சுப்பிரமணிய சாமி இராசீவ் இறந்த மறுநாள் வாசித்த 'புலிகள் கொலையாளர்கள்' என்ற தீர்ப்பிற்கு பொருத்தமாக விசாரணை செய்ய ஜெயின் மட்டும் அங்கும் இங்கும் விசாரணையின் திசையை திரும்பியதும், ஜெயினை மோசக்காரன், முன்னாள் கம்யூனிஸ்டு என்றெல்லாம் தூற்றி பல இடங்களில் விசாரணையின் போக்குக்கு தடை பெறுகிறார், சாமி.

இப்படியாக மிக சுவாரசியமான, அவசியமான அரசியல் பகுப்பாய்வு நூல் இது. கிட்டத்தட்ட அறிவியல் ஆய்வு நூலுக்கு இணையாக சம்பவங்களை பகுப்பாய்வு செய்கிறார். கொலைச்சதியின் முக்கிய பங்காளர்களுக்கு என தனித்தனி அத்தியாயம் ஒதுக்கி இருக்கிறார்.

மேலும், இராசீவின் கொலை என்பது இந்திய பிராமணக் குழுவின் முன்னெடுப்பில், சிங்கள அரசோடு நெருக்கமாக இருந்த புளொட், டெலோ, ஈபிஆர்எல்எப் போன்ற அமைப்பினரின் பங்களிப்புடன் நிகழ்ந்த பிராமண-சிங்கள கூட்டு கொலையாகும் என்கிறார்.

இசுரேலின் நகர்வுகள் இலங்கையில் அதிகமான போது தான் ராஜீவ் இலங்கை அரசியலில் தலையிட்டு, இஸ்ரேலை வெளியேற்றினார் என்பதை பலரும் இதற்கு முன்னர் விளக்கி இருக்கிறார்கள். ஆக, பிராமண-சிங்கள-இசுரேல் முக்கோண காதல் கூட்டணி இராசீவை கொன்று பழியை புலிகள் மீது போட்டது என்கிறார்.

பிராமணியத்தை ஆளவைக்க 'அழுக்கு அரைப்பிராமணன்' இராசீவ் பலி கொடுக்கப் பட்டார். நம் பார்வையில், இராசீவ் போன்ற அரண்மனை செல்லப் பிராணிகள் ஒரு நாள் இருக்கும், ஒரு நாள் சாகும், அது அவர்கள் பாடு.

ஆனால், பொய்ப்பழி சுமத்தி ஒரு இனத்தின் விடுதலை வேட்கையை நசுக்கி, தமிழினத்தை கொலையாளிகள் ஆக்கியதற்கு பிராமணியம் பெரும் விலை கொடுக்கும். புலிகள் இறந்தார்கள், மக்கள் மாண்டார்கள், பலர் சிறையில் வாடுகிறார்கள் என்பதைத் தாண்டி இது ஒரு சமூகத்தின் வரலாற்று வளர்ச்சி போக்கு, இனவிடுதலை என்பது இனத்தின் அரசியல் பரிணாம வளர்ச்சி, அதை தடுத்து மீண்டும் பிராமண முக்கோணத்தில் தமிழினத்தை மண்டியிட வைத்த பிராமணியம் தமிழர்களின் கையில் வன்முறையான அழிவை சந்திக்கும்!




CENTURY
TRAVELS GMBH

Emirates

Emirates Sommer 2018

# SRILANKA -COLOMBO

Direct Booking Nr.: 017621682149

## ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச் சலுகை

2019ம் ஆண்டின் கோடைகால
முன்பதிவுகள் ஆரம்பம்



**Juli-2019 ab599€**

அங்கத்தவர்களாக இணையும்
வர்த்தகர்களுக்கு
விசேட சலுகை (வி.ஐ.பி) உண்டு.

தொடர்புக்கு 0176 216 82 149
(Gültig nur mit gewerbe ammeldung)

Ram Nishanthan Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal
web : www.centurydravels.de email : info@centurytravels.de

ஒருவருட Lebara Play அன்பளிப்பு

5 விமானச் சீட்டுகள் வாங்கினால்
ஒரு வருட Lebara Play நீடிப்பு (Renewal)
கூப்பன் அன்பளிப்பாக வழங்கப்படும்

**Niederlassung**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
0231 58 96 557
0201 64888225
Fax : 0231 58 44 665

**Hauptsitz**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.30 முதல்
மாலை 3:30 திறந்திருக்கும்

TKS BEST FOODS

DORTMUND மாநகரில்

மளிகை உலகின்

BIGG BOSS

5th ANNIVERSARY

# ஒரு நாள் மட்டும்!

விழாக்காலப் பிரமாண்ட விற்பனை....

# 05.10.2019

நீங்கள் நம்பமுடியாத மாபெரும் விலைச்சலுகைகள் மற்றும்
குலுக்கல் முறையிலான (நம்பமுடியாத) பரிசுப் பொருட்களும்......!

BIG SALE ONE DAY

100€ க்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கான
குலுக்கல் முறையிலான பரிசில்கள்




இலங்கை/இந்தியா விமானச்சீட்டு




300€ கொள்வனவுப் பற்றுச்சீட்டு




200€ கொள்வனவுப் பற்றுச்சீட்டு

Aachi · Rabeena · TKS BEST FOODS · TRS ASIA'S FINEST FOODS · Tilda

0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods

Rheinische Str. 79, 44137, Dortmund Germany